
www.tamilarangam.net

நட்புறவு

# பாலம்

மார்ச் 1990 விலை. ரூ.3



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அக்கம்பக்கம் உச்சம்எச்சம்

நாகார்ஜுனன்

சமீபத்தில்—நம்மைப் பொறுத்தவரை சமீபத்தில் என்றால் ஆறுமாதம்—வந்துள்ள மூன்று நூல்கள் : செப்டம்பரில் ஆத்மாநாம் கவிதைகள். 1983இல் 2083 ஓர் அகால ஏடு என்ற இன்லண்ட் லெட்டர் பத்திரிகையை நடத்திய வருக்கு 1989இல் ஆப்செட்டில் வழவழவென்று ஒரு தொகுப்பு. கவிதைகளை விநியோகிப் பதில் ஒருவித அரசியல் இப்படி இருப்பதை யாராவது புரிந்துகொண்டு எழுதினால் நன்றாக இருக்கும். வெளியீடு: மீட்சி. டிசம்பரில் வீரத்தெலங்கானா—புத்தகவிழா. குளிரிலும் புழுதியிலும். சாளரம் வெளியீடான இது பற்றி அப்புறம் சாவதானமாகப் பேசலாம்.

அதே டிசம்பரில் சாரு நிவேதிதாவின் எக்சிஸ்டென்ஷியலிசமும் பேன்சி பனியனும் நாவல். கிரணம் வெளியீடு. அறிவுஜீவிகள், புரட்சியாளர்கள், குடும்பத்தார்கள், குற்றவாளிகள் எல்லோரையும் ஒன்றேபோல் பார்க்கத்தூண்டும் நவீன நாவல். படித்திருக்கிறீர்களா என்று கேட்கத்தூண்டும் பாக்கெட் நாவல் அமைப்பில். மறந்துவிட்டேனே. நாலாவதாக, பெங்களூர் டாக்டர் சு. சண்முகசுந்தரத்தின் வைரமுத்து வரை என்ற தமிழ்சினிமாப் பாடல்கள் பற்றிய ஆய்வுநூல். அவர் என்னதான் ஆய்வு செய்தது என்றாலும் நூல், ஈழப்போராட்டத்துக்கு முன்பும் ஊடாகவும் இலங்கை வானொலி தமிழ்நாட்டுக்கு, தமிழர்களுக்குச் செய்து கொண்டிருந்த சேவைபோல் அருமையான தொகுப்பு. 652 பக்கங்களில் தமிழ் சினிமாவின் அனைத்து சமாச்சாரங்களும். ட்டி. ராஜேந்தரின் சுல்தானா, மேரானா, சனம், கும்மா, மச்சி, எச்சி போன்ற சூழலில் புழுங்கும் வார்த்தைகளை டக்கென்று பிடிக்கும் வித்தியாசமான டாக்டர் சு. சண்முகசுந்தரம். காவ்யா வெளியீடு. ☐

## அயோத்தி முதல் பெர்லின் வரை

அதுமுதல் இதுவரை என்பது முதலாளித் துவப் பத்திரிகை உலகின் வாக்கிய அமைப்பு என்று தான் நினைத்திருந்தேன், சுவர்களைப் பற்றிய சமாச்சாரம் என்று வந்தவுடன் அது மாறிவிட்டது. இங்கே கட்டுகிறார்கள். அங்கே உடைக்கிறார்கள் அவ்வளவுதான். ஆனால் இரண்டையும் வரவேற்ற ஒரே பத்திரிகை தமிழில் தினமணியாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன்.

பெர்லினில் சுவர் இடித்தவுடன் கற்களை அமெரிக்காவில் கொண்டுபோய் விற்றார்கள். நாளைக்கு கிழக்கு ஐரோப்பாவில் மக்கள் ஆதரவோடு அமெரிக்க, ஐரோப்பிய, ஜப்பானிய பொருட்கள் விற்பனைக்கு சந்தையில் வரப்போவதற்கு இது முன்னோடி. மார்க்சிய வாதிகளுக்கு ஏகக்குழப்பம். ஆனால் இந்தியாவில் நடந்தது பற்றிக் குழப்பமில்லை. ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகப் பேராசிரியர்களில் ரோமிலா தாப்பர் உட்பட முன்னாலேயே சொல்லிவிட்டார்கள். செங்கல் பூஜைக்கு அயோத்தியில் தலித் குடிமகன் ஒருவர் துவக்கம் செய்தது மார்க்சியத்துக்குப் பாடமாக அமைந்தால் சரி. தேர்தலின் போது இப்படி ஓர் இடத்தைக் கண்டுபிடிதது அங்கே ஏதாவது செய்தால் நல்ல ஓட்டுவேட்டை. அடுத்து அவதார ஸ்தலமான துவாரகையில் உள்ள கட்ரா மசூதி என்கிறார்கள். துவாரகையில் கிருஷ்ணர் வாழ்ந்த பகுதி கடலுக்கடியில் போய்விட்டதாக இந்திய அரசின் தலைசிறந்த ஆராய்ச்சியாளர், தொல்பொருள் ஆய்வாளர் டாக்டர் எஸ். ஆர். ராவ் ஊர்ஊராகப்போய் சொல்லுகிறார். அடுத்து பிஜேபி underwater architecture படிக்க அதிக நிதி ஒதுக்குமாறு தேசிய முன்னணி அரசைக் கேட்கலாம். ☐

## சதிராடும் சூரியன்

முத்தமிழ் விழாவில் முதல்வர் மு. கருணாநிதி, பேசும்போது இயலிசை நாடக மன்றத்தலைவர் சாவிஸ்வநாதய்யரின் வேண்டுகோளை ஏற்பதாகத்தான இருந்தது. சதிராக இருந்து பரதநாட்டியமாக மாறி அய்யர்வீட்டுப் பெண்கள் ஆடுவதை மீண்டும் கோயிலில் கொண்டு வைப்பது சதிரானே, சே, சரிதானே! கடைசியில் அடுத்தநாள் முரசொலியில் சவசவ என்று மறுப்பு.

திராவிடப்பாரம்பரியம் தில்லியில் சென்று அமர்வதற்கு 'பராக், பராக்' எல்லாவாகத்தான் இருக்கமுடியும். பரதநாட்டியம்தானே! நிருத்ய சூடாமணி பத்மா சுப்பிரமணியத்தின் பிரதான சிஷ்யை யார் தெரியுமா? அல. புக்கரசி முரசொலி மாறன் எம். பி. தான். வழக்கம் போல் முதல்வர், செம்மங்குடி சீனிவாசய்யர், ஈழம் சென்று திரும்பிய வை. கோபால்சாமி, நாதஸ்வர வித்வான் நாமகிரிப்பேட்டை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பள்ளித்தோழி

இருள் மெல்லக் கவியும்
ஒரு மாலையில்...
காதலை எனக்கு
சொல்லித்தந்த பள்ளித்தோழி
ஏனடி இன்று நீயழுகின்றாய்?
விழிவழியே விழுகின்ற
கண்ணீரைத் துடைத்தெறி
எம்மவர் வீழ்ந்து கிடக்கின்ற
குருதி வீதிகளில்
நண்பருடன் நான் நடக்கையில்,

"'சீச்சி" என்னம்மா இது?
அழுகையை நிறுத்து

நீள்விழிக்குள் கிடக்கும்
காதல் கனவுகளை அழித்துவிடு?

என் சோதரர் ஆடும் களத்தில்
நான் நின்றபடி
வெற்றிக்களிப்பில்
பாட வேண்டுமடி பரணி ஆயிரம்

என்னை கவிஞனாக்கிய நீயா
கண்கலங்கினாய்?
காதலியே!
நீ மீட்டுகின்ற 'வயலினையா'
இவ்வேதனை வேளைகளில்
நான் ரசிப்பேன்?
உன்னைவிட இப்போது
நான் நேசிப்பது
என் மண்ணின் புதுவிடியலைத்தான்.

எத்தனை முறை சொன்னேன்
புரிந்து கொள் தோழி
புதுக்காலைகளை மலரவிடு.

— ஹம்சத்வனி

---

கிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்ததை மறக்கமுடியுமா ? ம்யூசிக் அகாடெமியில் அன்று புடைவைகள் நிறைய.

மறந்துவிட்டேனே, அன்புக்கரசி அவர்களின் நாட்டியத்தை பூம்புகார் காலத்து மாதவியின் தலைக்கோல் நாட்டியம் என்று பாராட்டியவர் வேறு யாருமில்லை—தெருவெல்லாம் தமிழ்வேண்டும் எனும்பேரவைத்தலைவர் தமிழ்க்குடிமகன்தான் ! அடுத்து புகார் archaeology ?

ஒருபக்கம் சதிரை ஆதரித்த சத்தியமூர்த்தியை வெட்டிப்பேசிய டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் பெயரில் மகளிர் மேம்பாட்டுத்திட்டம். இன்னொரு பக்கம் நவீன தலைக்கோல். சபாஷ் சரியான போட்டி ! □

### பள்ளத்தாக்கு பாலிடிக்ஸ்

சென்றமாதம்காஷ்மீரில் பிரச்சினை உச்சக்கட்டத்தை அடையும்போது ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீதரின் தேன்நிலவு போட்டார்கள். ஸ்ரீநகரின் டால்ஏரியில் தண்ணீர் நிறைய, அமைதியாய், ஆப்பிள்தின்றுகொண்டு சாம்பாரும் வைஜயந்திமாலாவும் (அப்போது எம். பி. அல்ல, பேபி என்றே வஞ்சிக்கோட்டை வாலிபனுக்குப் பின்பு அழைக்கப்பட்டார்கள்) 'ஓஹோ எந்தன்பேபி' என்று ஸ்கையிங், ஸர்ஃபிங் செய்து பாட்டுப் பாடினார்கள். நம்பியார் தான் வில்லன். ஷபரிமலைக்குப் போய் திரும்பிவந்து படத்தைப் பார்த்துக் கொண்டிருப்பார் மனுஷன். பாட்டுப் பாடிய ஏ.எம். ராஜாதான் விபத்தில் போய் விட்டார். நம்பியார் வழக்கம்போல் பேஷுகிறார். ஒருகொலை பண்ணிவிடுகிறார், படமே ஆடிப் போய் விடுகிறது. ஆளுநர் ஜக்மோகன் அதைச் செய்ததால் நிலைமை கட்டுக்குள் அடங்கிப் போய்விட அடுத்த சில நிமிடங்களில் 20-40-59 செய்தியில் ஊரடங்குச் சட்டத்தைக் காய்கறி வாங்குவதற்காகத் தளர்த்துகிறார்கள். வீட்டிலிருப்பவர்கள் சாப்பிட்டுவிட்டுத் தூங்க நேரமாகிறது. காஷ்மீர் பிரிந்துவிட்டால் Map அலங்கோலமாகப் போய்விடுமே என்று அன்று மக்பூல் பட்டைத் தூக்கில் போட்டார்கள். இன்று டிவி newsக்கு முன்பும் பின்பும் Map-புக்கு முன்னாடி தலையை நன்கு சீவிய பெண்கள், குழந்தைகள் பாடுகிறார்கள். □

www.tamilarangam.net

வ. ஐ. ச. ஜெயபாலன்

# சாகா வரம் பெற்ற மனிதர்கள்

அந்தக் காணி நிலத்தின் நடுவில் அமைந்திருந்த நல்மாளிகை புகைபடிந்த குட்டிச்சுவர்களாகவும், தூண்களாகவும் சிறுத்துப்போய்க் கேட்பாரற்றுக் கிடந்தது.

சூழப் பத்துப் பன்னிரண்டு தென்னை மரங்கள். அவற்றுள் பல தீயில் பொசுங்கிப் போய்ச் செத்துக் கொண்டிருந்தது. எரிந்து கிடந்த முற்றத்துப் புல்வெளியிலும், வீதியிலும் வெற்று இளநீர்க் கோப்பைகளும், இராணுவ முத்திரை இடப்பட்ட தகரடப்பாக்களும் இறைந்து கிடந்தன. குட்டிச் சுவர்களின் நடுவிலிருந்து ஓமகுண்டத்திலிருந்து எழுவதுபோல எழுந்து வானத்தில் நூல் விட்டது புகை. வேலியில் இரண்டு தீக்கங்குகள் இரை எடுத்த மயக்கத்தில் தூங்கி வழியும் கொடும்புலி ஒன்றின் கண்களைப் போல அவ்வப்போது சுடர்ந்தது.

வீதியிலும் பிணைச்சல் உடைந்து தொங்கிக் கிடந்த கடப்பின் பக்கத்திலும், சாம்பல் பறந்து கொண்டிருந்த முற்றத்திலும் வெற்று றைபிள் தோட்டாக்கள் இறைந்து கிடந்தன. கவச வண்டிகளின் சில்லும், கனத்த சப்பாத்துக்களும் தடம் விழுத்திக் கதிர் அடித்தக் களம் போலிருந்தது முற்றம். குட்டிச் சுவர்களுக்கும் இறைந்து கிடந்த கூரை ஓடுகளுக்கும் கரிக் குவியல்களுக்கும் மத்தியில் கருகிப்போயும், சாம்பலாகியும் கிடந்தது ஒரு மானுடம்.

அந்த மானுடத்தின் எரிந்து போன தலைக்கோ கை, கால் முண்டத்துக்கோ, எலும்புகளுக்கோ, ஆண் பெண் வித்தியாசம் இருக்கவில்லை. வெள்ளெலும்பாகவும் சாம்பராகவும், கருக்கலாகவும் கிடந்த கபாலத்தின் பக்கத்தில், வெண்சாம்பர் பொடி பறந்த சீமெந்து நிலத்தில் உருகி உருக்குலைந்த தங்கத்திரள் ஒன்று மின்னியது. பாவம் பெண்கள்! இந்த நெருப்புக்குக் கூட அவள் வெறும் இரையாக மட்டுமே தென்பட்டாள் போலும்.

பொழுதுசாய்கிற வேளையாகப் பார்த்து அந்த வீட்டின் முன்னே ஒரு ஜீப் வண்டி வந்து நின்றது. சிங்களம் வாசிக்கத் தெரிந்தவர்களுக்கு அந்த வண்டி நீர்ப்பாசன வாரியத்தின் வண்டி என்பது தெரிந்திருக்கும். அந்த வண்டியிலிருந்து ஒன்றும் அரச அதிகாரிகளோ, அவர்களது பணியாளர்களோ இறங்கவில்லை. ஒரு மொட்டைத்தலை இளைஞனைத்தவிர ஏனைய நால்வரது தலைகளும் பரட்டைபற்றிக் காகக்கூடு போல இருந்தது.

யாருமே ஒழுங்காகச் சவரம் செய்திருக்கவில்லை. பலரது முகங்களில் தாடிப்பற்றை மண்டிக்கிடந்தது. எல்லோரது கைகளிலும் ஆயுதம் இருந்தது. எனினும் இராணுவத்தினரின் ஆயுதங்களைப்போல ஒரு சீராக பளபளக்கும் ஆயுதங்களல்ல அவை. இவர்களை அந்த ஊர் மக்களுக்கு நன்கு தெரிந்திருக்க வேண்டும். காணியின் பின்புறத்தில் வேலி போட்டிருந்த காடுகளில் இருந்து மனிதர்கள் துணிச்சலுடன் வெளியில் வரத் தொடங்கினர்.

நெடுநேரத் தவிப்புக்குப்பிறகு ஒரு குழந்தைக்கு அழுகிற சுதந்திரம் கிடைத்திருக்க வேண்டும். காட்டின் ஆழத்திலிருந்து வெடித்து வீரிட்ட குழந்தை ஒன்றின் அலறல், காட்டையும், மண்ணையும், உயிரினங்களையும் அன்று வெடிப்பின் கதிரியக்கம் போல ஒரு கணம் தைத்தது. ஜீப் வண்டியிலிருந்து இறங்கி வந்த இளைஞர்கள் கூட ஒரு கணம் உறைந்து போனார்கள்.

சிலநாட்களின் பின்னர் மழை பெய்தது. முற்றத்தில் சாம்பரைக் கழுவித் துடைத்த வெள்ளம் வயல்வெளியில் சாம்பரையும், மண்ணையும் பதமாகக் கலந்து வைத்தது. அந்த ஊர் மக்களைக் கூவி அழைத்த வானம், நாம் உங்களை கைவிட்டு விடவில்லை என்று இயற்கையின் சார்பில் உறுதி கூறியது. மழை அந்த மக்களைத் தேற்றியது.

விதைகள் எரியுண்டு போய் விட்டனவே என்று வருந்திய மக்களைப் பக்கத்து ஊர்களிலுள்ள உறவினர்களதும், நண்பர்களதும் நினைப்பு மனம் தேற வைத்தது. தரிசாக சாம்பர் கரைந்தோடிய வயல்களை வாடைக் காற்று ஆசீர்வதித்தது.

காடுகளில் குயில்கள் நம்பிக்கையைப் பாடின. காடுகளிலிருந்து இறங்கிவந்து வயல் வரம்புகளில் குந்திய மயில்கள் வாழ்வின் எழிலை ஆடிக்காட்டின. கருகிக் கிடந்த குட்டிச் சுவர்களில் காட்டுத்தடிகளை இணைத்து வைக்கோற் கூரை போடப்பட்டிருந்தது.

இருளைக் கழுவித் துடைத்துத் தீட்டை அகற்றியபடி ஒரு புதிய பகலின் சேதியை கீழை வானத்தில் கதிரவன் பிரகடனப்படுத்திய போது அந்தக் குடிசைக்குள் இருந்து ஒரு சிறுமி வெளியே ஓடி வந்தாள்.

முற்றத்தில் புதிதாகத் துளிர்த்து பசுமை அப்பி வைத்திருந்த இளம்புற்களுக்கு நீர் பாய்ச்சுகிறவளைப் போல நடந்தும் ஓடியும் சிறுநீர் கழித்த அந்தச் சிறுமி நெடுநாட்களின் பின்னர், மீண்டும் தனது முற்றத்துக்கு வந்திருக்கிற காகத்தை வியப்பு அகட்டிய விழிகளால் பார்த்தாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அந்தக் காகத்துடன் பேசவேண்டும் போல் இருந்தது அவளுக்கு. ''கா'', ''கா'' என்றாள். காகங்களுக்குப் பேச முடியும் என்பதை அம்மா கூறிய கதைகளிலிருந்து அவள் தெரிந்து வைத்திருந்தாள். ''கா...கா...கா...கா'' என்று காக்கா பாஷையில் அந்தக் காகம் சிறுமியுடன் பேசியது. ''இவ்வளவு காலமும் எங்கே போயிருந்தாய்?'' என்று மழலைத் தமிழில் அந்த காகத்தைப் பார்த்து வினவினாள் சிறுமி.

காக்கை பேசியது.

வானத்தில் அந்தச் சிறுமியின் அம்மாவைப் பார்த்துவிட்டு வந்திருந்தது அந்தக் காக்கை. ''என்ர பிள்ளை எங்கே? காயத்திரி எங்கே? என்று அம்மா அழுதுகொண்டு இருக்கிறாவா?'' என்று அந்தச் சிறுமி காக்கையிடம் கேட்டாள்.

''ஆம், ஆம்'' என்றது காக்கை. ''அம்மா'', ''அம்மா'' என்று சிணுங்கி கண்ணீர் சிந்தத் தொடங்கினாள் சிறுமி.

காக்கை நீண்ட நேரம் கரைந்து கரைந்து ஏதோ சொல்லிற்று. சிறுமி கண்களைத் துடைத்துக் கொண்டாள். ''காயத்திரி இனி அழமாட்டாளாம். தப்புப் பண்ண மாட்டாளாம்'' என்று சொல்லி, 'அம்மாவைக் கூட்டிக்கொண்டு வா' என்று காக்கையிடம் விண்ணப்பித்தாள் சிறுமி.

காக்கையும் ''ஆம், ஆம்'' என்றபடி பறந்து போனது.

முற்றத்தில் சாம்பலும், குப்பைகளும் கூட்டிக் குவிக்கப்பட்டிருந்தது. சற்றுத் தள்ளி தோட்டத்தில் பறிக்கப்பட்டிருந்த குழிகளில் சாம்பரையும், குப்பைகளையும், மண்ணையும் கொட்டி நிரப்பினான் ஒரு மனிதன். தாடி வளர்ந்து தளர்ந்து போயிருந்த அந்த மனிதன் எங்கிருந்தோ கை நிறைய வாழைக்குட்டிகளை அள்ளி வந்தான்.

ஒவ்வொரு குழிக்குப் பக்கத்தில் ஒவ்வொரு வாழைக்குட்டிகளாகப் போட்டபடி வேலையில் கவனமாக நடந்து அந்த மனிதனை நோக்கி ''அப்பா'' என்றபடி சிறுமி விழுந்தடித்து ஓடி வந்தாள். அவளது கைநிறைய புல்பூண்டுகளின் பூக்கள் சிரித்தன.

''அப்பா! காக்கா அம்மாவைக் கூட்டி வருமாம். காயத்திரி சிரிச்சாத்தான் அம்மா வருவாங்களாம்.'' கைகளிலிருந்த வாழைக் குட்டிகளை மண்ணில் வீசிவிட்டு தனது குட்டியை அந்த மனிதன் அள்ளியெடுத்து அணைத்தான். அவளது முகத்தில் முத்தங்கள் பதித்தான். தோள்களில் அவளது முகத்தை வளர்த்தியபடி மறுபுறமாக முகத்தைத் திருப்பி தனது குட்டிக்குத் தெரியாமல் அழுதான் அந்த மனிதன்.

''அழாதே அப்பா'' என்றபடி தனது தலையை விடுவித்துக் கொண்டு அந்த மனிதனின் முகத்தைத் திருப்பினாள் சிறுமி. ''அழாதே அப்பா'', ''அழுதா அம்மாவுக்குப் பிடிக்காதாம் வரவே மாட்டாளாம்...'' என்று கடிந்து கொண்டாள் சிறுமி.

காக்கை சொன்ன சங்கதிகள் எல்லாம் அவளுக்குப் பசுமையாக ஞாபகத்தில் இருந்தது. அந்த மனிதன் சிரித்தான். அந்தச் சிறுமியோ பல மடங்கு குதூகலத்துடன் கெக்கலித்துச் சிரித்தாள்.

சிறுமி அந்தக் காட்டைப் பார்த்தாள். சில நாட்களின் முன்புவரை வீட்டில் கக்கூசு கட்டப்படுவதற்கு முன்புவரை அதிகாலைகளில் அம்மாவுடன் அந்தக் காட்டுக்குப் போய் வருவாள் சிறுமி. அம்மா சிறுமியாக இருந்தபோது, அந்தக் காடு பெரியதாக இருந்ததாம். அங்கு புள்ளி மான்கள், யானைகள் எல்லாம் இருந்ததாம். இப்போ சில குரங்குகளும், மரஅணில்களும், பச்சைப் புறாக்களும், முயல்களும் மட்டுமே அந்தச் சிறு காட்டுக்குள் இருந்தன.

காலை வேளைகளில் காட்டுக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என அம்மாவிடம் அடம் பிடிப்பாள். புதிதாகக் கட்டப்பட்டுள்ள கக்கூசைக் கண்டாலே பிடிக்கவில்லை அவளுக்கு. கக்கூசுக்குள் மரஅணில்களும் பச்சைப் புறாக்களுமில்லை. புற்களும், பூண்டுகளும், பூக்களும் இல்லை.

முன்னர் இந்தக் காடு பெரிதாக இருந்த போது இங்கு தேவதைகள் இருந்ததாம். மனிதர்கள் கெட்டுப்போன பின்னர், அழுது அடம் பிடிக்கத் தொடங்கிய பின்னர், தேவதைகள் வெகுதூரத்துக்குப் போய்விட்டனவாம்.

காயத்திரி தப்புச் செய்யாமல், அழாமல் இருந்தால், வயிறு நிறையச் சாப்பிட்டால் தேவதைகள் திரும்பி வரும் என்று அம்மா சொல்லியிருக்கிறாள். தேவதைகள் கேட்டதெல்லாம் தரும் என்பது அவளுக்கு ஏற்கனவே தெரிந்த விசயம்தான்.

அவளுக்கு அம்மா வேண்டும். முற்றத்தில் பூமரங்கள் வேண்டும். எரிந்துபோன விளையாட்டுச் சாமான்களும், சிவப்புச் சட்டையும், தலையணையும்கூட அவளுக்கு அவசரமாக தேவைப்பட்டது. ''நல்ல பிள்ளையாக இருந்தால் இந்தக் காட்டுக்கு தேவதைகள் வரும். காயத்திரிக்கு என்ன வேண்டும் என்று கேட்கும். அம்மா வேண்டும் என்று சொல்வேன்'' என அந்தச் சிறுமி நினைத்தாள்.

''தேவதையே! தேவதையே! எனக்கு அம்மா வேண்டும்'' என்று வாய்விட்டு முணுமுணுத்தாள் சிறுமி. பின்னர் கடைக்கண்ணால் தனது தந்தையைப் பார்த்தவள் என்ன நினைத்துக் கொண்டாளோ, ''தேவதையே! தேவதையே! எனக்கு அப்பாவும் அம்மாவும் வேண்டும்'' என்று சற்றுப் பெரிதாக வாய்விட்டுச் சொன்னாள்.

மகிழ்ச்சியாகப் பாடத் தொடங்கியது காடு.

□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாலம்

இலக்கிய மாத இதழ்
மார்ச் 1990

25

ஆசிரியர் குழு :
சமந்தா
இளம்பிறை
குமார்

தனியிதழ் ரூ. 3.00
ஆண்டுச் சந்தா ரூ. 30.00

தொடர்பு முகவரி :
நிர்வாகி
பாலம்
12, முதல் பிரதான சாலை
நேருநகர், அடையாறு
சென்னை-20

ஆசிரியர் :
இரா. திரவியம்

# ஜனநாயகமும் மதச் சிறுபான்மையர் பாதுகாப்பும்

பாபர் மசூதியைத் தாமாகவே அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டுமென விஸ்வ இந்து பரிஷத் கோருகிறது. இராமாயணக் காவியநாயகன் இராமர் பிறந்த இடம் அதுதான் என்கின்றார்கள் அவர்கள்.

இந்தியா விடுதலை அடைந்த மறு ஆண்டு. மாவட்ட ஆட்சித்தலைவராக இருந்த ஒருவர் (தற்போது பாரதீய ஜனதாவில் உள்ளார்.) பாபர் மசூதியில் ராமர் சிலையைக் கொண்டுபோய் வைத்தார். பின்னர் காவலர் ஒருவர் ராமர் சிலைக்குப் பின்னால் ஜோதி ஒன்று மறைவதுபோல் கனவு கண்டதாகக் கூறினார். ராமர் பிறந்த இடத்தை உறுதிப் படுத்திக்கொள்ள இந்துக்களுக்கு, இது போதுமானதாக இருந்தது. விஸ்வ இந்து பரிஷத்காரர்கள் இது தான் ஆதாரம் என்கிறார்கள். ராமஜென்ம பூமியை உடுக்கடித்துக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்குப் பதிலாகக் கனவு கண்டு கூறியுள்ளார்கள் !

ஆனால் முகலாய மன்னன் பாபரைப் புதைத்ததால் மசூதியாக மதிக்கப்பெறும் ஓர் இடத்தை முஸ்லீம்கள் தாமாகவே அப்புறப்படுத்திக்கொள்ள இந்தப் பூர்வாங்கம் மட்டும் போதுமானதா ? போதுமானதாக ஆர். எஸ். எஸ்ஸும் பாரதீய ஜனதாவும் விஸ்வ இந்து பரிஷத்தும் நம்புவதாகத் தெரியவில்லை.

அதனால்தான் கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னால் ராமர்கோவில் கட்ட, நாட்டின் மூலை முடுக்கிலிருந்தெல்லாம் கல் கொண்டுபோய்க் கால்கோள் விழாவை நடத்தி முடித்தார்கள். இந்து மத வெறியை வெகுஜனத் தன்மையுடையதாக்க மேற்கண்ட அமைப்புகள் கையாண்ட தந்திர உத்தி அது.

அன்றைய மத்திய ஆளுங்கட்சியான இந்திரா காங்கிரசும் அதன் அரசாங்கமும் அதைக் கையாண்ட விதமோ மதவாதிகள் கையாண்ட பாணிக்குச் சற்றுப் சளைத்ததல்ல.

தேர்தலில் ஓட்டுப் பொறுக்குவதற்காகத் திட்டமிட்டிருந்தபடி அடிக்கல் நாட்ட அனுமதித்தார்கள்; அதே வேளையில் கட்டிடம் கட்டுவதைத் தள்ளிப் போட வைத்தார்கள். இதனால் இந்து—முஸ்லீம் கலவரம் மூளாமல் தடுத்துவிட்டதாகத் தம்பட்டம் அடித்தார்கள். ஆனால் மதச் சிறுபான்மையினராகிய முஸலீம்களின் மனத்தில் அச்சத்தை உண்டாக்குவதாக ராமர்கோவில் அடிக்கல் நாட்டுவிழா நிகழ்ச்சி அமைந்து விட்டது என்பதை மறுக்கமுடியாது.

மேலும் இந்துமத வெறியர்களுக்கு ராமர்கோவிலுக்காக நாட்டப்பட்ட அடிக்கல் போதையூட்டிக் கொண்டிருக்கிறது. இந்தக் கிறுகிறுப்பிலேயே அவர்கள் ''இன்னும் 3000 இந்துக் கோவில்களை முஸ்லீம்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நட்புறவுப் பாலம்
பற்றிய அறிக்கை
4வது பாரம்
(8ஆம் பிரிவுப்படி)

வெளியிடும் இடம் :
சென்னை

வெளியிடும் காலம் :
மாத இதழ்

அச்சிடுபவர் :
ஜே. ரமணி
இனம் :
இந்தியர்

முகவரி :
பிளேஸ் பிரிண்டர்ஸ்
12 முதல் பிரதான சாலை
நேரு நகர் சென்னை - 20

வெளியிடுபவர் :
இரா. திரவியம்
இனம் :
இந்தியர்

முகவரி :
12 முதல் பிரதான சாலை
நேரு நகர் சென்னை - 20

ஆசிரியர் :
இரா. திரவியம்
இனம் :
இந்தியர்

முகவரி :
12 முதல் பிரதான சாலை
நேரு நகர் சென்னை - 20

உரிமை :
இரா. திரவியம்
இனம் :
இந்தியர்

முகவரி :
12 முதல் பிரதான சாலை
நேரு நகர் சென்னை - 20

இரா. திரவியம் என்கிற நான் மேற்கூறிய தகவல்கள் அனைத்தும் எனதுஅறிவிற்கும் நம்பிக்கைக்கும் தெரிந்தவரை உண்மையே என இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பம். இரா. திரவியம்
(வெளியிடுபவர்)

சென்னை
25-2-90

நாடெங்கிலும் ஆக்கிரமித்துள்ளதாக" அறிவித்தும் உள்ளார்கள்.

ஆக, இந்தியா முழுமையிலும் பரவலாக இந்துமத வெறிக்குத் தூபமிடும் 3000 கேந்திரங்களைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார்கள் என்பது தெள்ளத் தெளிவாகிறது. இப்படியாக இந்தியாவை இந்துக்களின் நாடாக மாற்றுவதற்கான அடுத்தகட்ட அரங்கேற்றத்திற்கும் கால்கோள் நடத்தியுள்ளனர்.

இதை அனுமதிப்போமானால் இந்துமதமும் பிராமணியமும், அரசியலுக்கும் மேலடுக்கில் இருந்து குலக்குழுக் கொடுமைகளை மீண்டும் ஜனரஞ்சகமாகச் செய்து முடிக்க இடங்கொடுத்தவர்களாவோம்; மேலும் ஜனநாயகந்தின் ஆணிவேரையே அறுத்தெறியக் காரணமாகி விடுவோம்.

எனவே, சிறுபான்மையினரின் பாதுகாப்பும் ஜனநாயகமும் இந்தியாவில் பின்னிப் பிணைந்த பந்தமுடையவை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அடுத்து அயோத்தியில் ராமர் கோவிலுக்கு அடிக்கல் நாட்டிய நிகழ்ச்சி என்பது ஜனநாயகத்திற்கு விடப்பட்ட எச்சரிக்கை என்று கருதவேண்டும். இல்லாவிட்டால் நவீன கருவிகளுடன் ஆதிகாலத்திற்கு பயணம் செய்யப் போகிறோம் என்பதாகும்.

இந்தக் கட்டத்தில் தேசிய முன்னணி அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்பதே முக்கியமானதாகும். தவிழப் போவதைப் பற்றிக் கவலைப்படாமல் பாரதீய ஜனதாக் கட்சியின் அழுத்தத்திலும் பிடியிலும் சிக்கிக்கொள்ளாமல் அது செயல்படவேண்டும். ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்றுவதில் உறுதியாகக் காலூன்றி நிற்கவேண்டும். இல்லையேல் எதிர்காலத்தில் ஜனநாயகமும் இல்லை; மதச் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பும் இல்லை எனும் நிலை தோன்றும்.

## மண்டேலாவுக்கு வாழ்த்து

நெல்சன் மண்டேலா — தென் ஆப்பிரிக்க கறுப்பு இன மக்கள் போராட்டத்தின் உந்து சக்தியாகவும் செயலூக்கமிக்க தலைவராகவும் திகழ்கிறார். நிற வெறியர்களின் ஒடுக்குமுறைக்கு முகங்கொடுத்து 27 ஆண்டுகள் சிறைவாசத்திற்குப் பிறகு சொந்த மக்களை சந்திக்கிறார் மண்டேலா.

சிறையிலிருந்து மீண்டவுடன் செய்தியாளர்கள் மாநாட்டில் பேசிய மண்டேலா "நிறவெறிக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிரான ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் போராட்டம் தொடரும்" என்று பிரகடனப்படுத்தியிருப்பதை தமிழ் மக்களின் சார்பாக பாலம் வரவேற்கிறது. சிறைமீண்ட மண்டேலாவுக்கு பாலம் தனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பூமணி

# பாதை

[இச்சிறுகதை வாசகர்களிடம் சில உணர்வுகளை வெளிப்படுத்தும் என்று கருதுகிறோம். உங்களுடைய உணர்வுகள் எதுவாக இருந்தாலும் எழுத்துமூலமான விமர்சனத்தை வரவேற்கிறோம்—ஆ.ர்]

மதியம் கூட்டாங் கஞ்சி குடித்ததும் மந்தைக்கு ஓட்டம் பிடித்தார்கள்,

''வெருசனா வாங்கலே. நெருக்குது.''

கொம்பன் வயிற்றுப் பாரத்தை இறக்க தட்டுக் கொட்டினான். அவனுக்குப் பின்னால் திணறித் திண்டாடிக் கொண்டு தேரை புல்லெலி சிட்டன்.

மந்தை முழுக்க குப்பை மேடுகள் நிரவியிருந்தன. அங்கங்கே களங்களமாக பீத்தடங்கள். அவற்றுக்குப் பந்தலிட்டிருக்கும் பல வகைச் செடிகள். தும்பை துளசி கொளுஞ்சி குப்பைமேனி கொக்கரவாளி கன்னிப்பிள்ளை...

நாலுபேரும் சேர்ந்து உட்கார வசமான இடம் கிடைக்கவில்லை. அவசரமாகத் தேடினார்கள்.

''தள்ளித் தள்ளி உக்காருவமா.''

''கிட்டருந்தாத்தான் பேசுறதுக்குத் தோதாருக்கும்.''

''செடிவேற மறைக்கும்.''

குறுக்குப் பர்தையொண்ணு தட்டுப்பட்டது. சிட்டன் சுதாரித்தான்.

''இதுதாண்டா நல்ல எடம்.''

கோவணத்தை அவிழ்த்து பாதையில் வட்டமாக உட்கார்ந்து சத்தமாகப் பேச ஆரம்பித்தார்கள்.

''கந்தன் கெணத்துல கயறு அந்தந்து வுழுகுது.''

ஒரு முக்கலுக் கொருக்க துருக்துருக்கென்று குமித்து அடுத்த இடத்துக்கு நகர்ந்து கொண்டார்கள். அப்படியே நிறையக்குமிகள் சேர்ந்து விட்டன.

குப்பையில் திரிந்த கோழிகள் குடுகுடுவென்று ஓடிவந்து அவர்களைச் சுற்றி நின்றுகொண்டு உள்க் கெக்கரிப்பில் நச்சரித்தன.

''கல்லுப் பெறக்குடா இதுகள ஒரு கையி பாத்துருவோம்.''

''ஒனக்கென்ன வம்பா. கோழிக்காரன் கண்டா சும்மாவுடமாட்டான்.''

''எம் பிய்ய அவன் கோழி ஏன் திங்குது.''

''அப்படின்னா நீ ஒன் வீட்டுக்குள்ள பேலணும்.''

''கோழிய அடிச்சு சூட்டாங்கறி போடுவமா.''

''பீ திங்கிற கோழியவா.''

''மனுசனே திங்கான். இவன் கோழிக்குப் போயிட்டான்.''

''நீ திம்பயோ என்னமோ.''

''பண்ணி என்ன திங்குது.''

''பிய்யத்தான்.''

''அதோட சாணிய பிஞ்சைக்கு ஒரம் போடுறமில்ல.''

''போட்டா வெள்ளாம நல்லா வெளையும்.''

''பிஞ்சையில வெளையிறத நீ திங்கயில்ல.''

''ஆமா.''

''அது பிய்யில வெளஞ்சதுதான்.''

''ஆமப்பா நீ சொல்றது சரியாத்தான் இருக்கு.''

''கோழியத் தின்னாலும் ஒண்ணுதான் நம்ம பிய்யத்தின்னாலும் ஒண்ணுதான்.''

கோவணத்தை கொடியாட்டிச் சிரித்தார்கள்.

''கண்ணுப் புள்ளச் செடியப் பாரு. மனுசச் சாணி ஒரத்துல பூத்துச் சொரிஞ்சிருக்கு.''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''இதத்தான தைப் பொங்கலுக்கு வீடு வாசலெல்லாம் பொலி கெட்டுறொம்.''

''சேநெனச்சுப் பாத்தா எல்லாம் அசிங்க மாத்தான் இருக்கு.''

''அசிங்கப்பட்டா ஒரு நாளைக்கு கஞ்சி குடிக்கமுடியாது.''

காத்திருந்து பொறுமையிழந்த ஒரு கோழி சிட்டனின் குண்டிப் புண்ணைக் கொத்தி விட்டது. அவன் புண்ணில் வடியும் ரத்தத்தைத் தொட்டுப் பார்த்து கோவத்தில் கோழிகளை விரட்டினான். அவை சிறகடித்து எக்காள மிட்டு செடிகளைத் தாண்டித் தாண்டி ஓடி திரும்பிப் பார்த்தன.

தேரை கிண்டலாகப் பாடினான்.

''கோழி வந்து கொத்துது
கோவணத்தக் கெட்டிக்கோ
குண்டியத்தான் மூடிக்கோ.''

புல்லெலி ரெட்டை மண்டையைத் தடவிக் கொண்டே சொன்னான்.

''பாத வழியே பேண்டுட்டுப் போனா ஊருணிக்குள்ள கொண்டுபோயி வுடும்.''

கொம்பன் முறைத்தான்.

''ஆமா ஒங்க மச்சுவீட்டுக்குள்ள போயி வுடும். எந்திரிங்கடா. வகுத்துக்குள்ள இனி ஒண்ணுமில்ல.

''பசிக்கிற மாதிரி இருக்குதுல்ல.''

ஏலே! ஒன் வகுறென்ன கெணறா கொளமா. தின்னுட்டுத் தின்னுட்டுப் பேலு றதுதான் ஒனக்கு வேல.''

''ஊருல எல்லாரும் வேற என்ன செய்றாக ளாம்.''

''நீ இருக்கிற வீட்ல அன்னச் சாணி வச்சுத்தான் மொழுகணும்.''

''இப்ப மாட்டுச்சாணி வச்சு மொழுகுறாக. இனிமே அப்படிச் செய்ய வேண்டியதுதான்.''

தேரை காலை அகலித்து பாதைப் புழுதி யில் உட்கார்ந்து உரசி துடைத்துக் கொண்டே போனான். அதே தடத்தில் புல்லெலியும் அவன் தடத்தில் கொம்பனும் நக்கிழித்தார்கள். புண் இருப்பதால் சிட்டன் மட்டும் படாமல் இழுத்துக் கொண்டு நகர்ந்தான்.

ஒருத்தருக்கொருத்தர் விறைப்பாகப் பார்த் தார்கள்.

''ஏண்டா எம் பின்னாலயே வாற.''

''நீ எனக்குப் பின்னாலதான் நக்கிழிக் கணுமா.''

''நீ ஏன் எனக்குப் பெறத்தால வாற.''

''போங்கடா போக்கத்த பெயகளா. அப்பத்தான் முள்ளுக்குத்தாதுன்னு என் தடத்துல வாறீக.''

''நேத்து ஒருத்தன் தொடச்ச எடத்துல தானலே நீ போற. கெட்டிக்காரன்னா நெருஞ்சி முள்ளுல உக்காந்து இழுக்கணும்.''

நாலுபேரும் கோவணத்தைக் கட்டிக் கொண்டு ஆடிப் பாடினார்கள்.

''எம்பிய்யத் தொட்டவன்
ஊரெல்லாம் பீப்பெறக்கி
எம்பேர் மானம்
என்னத் தொட்டா பாவம்.''

அந்த வழியாக முத்துக்காளைத் தாத்தா முக்காடு போட்டுக் கொண்டு வேகுவேகு என்று வந்தார். அவர் உடம்பெல்லாம் வேர்வைத் தப்பளம்.

''தாத்தாவுக்கு வழிவுடுடா.''

''நான் அவர மறிச்சிக்கிட்டா நிக்கென்.''

அவரால் பீக்குமிகளைத் தாண்டிப் போக முடியவில்லை.

''எவண்டா இந்தக் கூத்துப் பண்ணி வச் சிருக்கிறது.''

''நாங்கதான். வீட்ல கூட்டாங்கஞ்சி காட்ல கூட்டாம்பீ.''

''வேற எடங் கெடைக்கலயோ. ஆளு நடமாடுற பாதையில இருந்துருக்கீகளே. பூளக் கொழுப்பில்ல.''

''வேற எடம் எங்களுக்கு தாத்தா.''

''ஊரச் சுத்தி ஓடைக்குப் பஞ்சமா.''

''ஓடையெல்லாம் நீங்க குத்தகைக்குப் புடிச்சாச்சு. ஒரு எடம் பாக்கி வுடல.''

தாத்தா முழித்தார்.

''நான் எப்பயும் மேல ஓடைக்குத்தாண்டா போவென்.''

''கீழ ஓடைக்கு கீழவீட்டுத் தாத்தா போறாரு.''

''அடே மேல ஓட எப்பேர்ப்பட்ட எடம் தெரியுமாடா.''

''அப்படியா.''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"ராசா கொல்லைக்கிருந்த ஒடையாக்கும்."

"ராசாவா."

"அந்தக் கத தெரியாதா. இம்புட்டுத் தானா ஒங்க பூளாக்கு. வெலகி நில்லுங்கடா வெங்கம் பெயகளா."

அவர் புறப்படுவதுபோல் போக்குக் காட்டினார்.

"தாத்தா... தாத்தா... ராசா கதையச் சொல்லுங்க தாத்தா..."

அவர்கள் கெஞ்சினார்கள்.

"வாங்க சொல்றென்."

அவர் கொஞ்ச தூரம் கூட்டிக்கொண்டு போனார். நின்று நெஞ்சு ஈரத்தில் ஊதி காற்றுச் சொகமேற்றி விட்டு தோரணையாகப் பார்த்தார்.

"சொல்லட்டுமா."

அவர்கள் கிட்ட வந்தார்கள். அவர் கதையை ஆரம்பித்தார்.

அந்தக் காலத்துல பொக்குமுத்து பொக்கு முத்துன்னு ஒரு பெரிய மனுசன் இருந்தாரு. கெழடுலயும் கெழடு வங்கெழடு. தலையெல்லாம் பஞ்சுப் பொதியா நரச்சு முதுகுல கெண்டச் சொறி பத்தீருச்சு."

"ஒங்கள மாதிரி."

"எனக் கென்னடா எளவட்டத்துக்கு. ஒத்தக் கைய நீட்டுனா எவனும் மடக்க முடியுமா. இண்ணைக்கும் வீசையில இலுமிச்சம் பழத்த நிறுத்துவனா சும்மாவா... இப்படிப் பேசுனா கத சொல்லமாட்டென் போங்க."

"இனிமே பேசமாட்டொம் தாத்தா.

"கெழடுக்கு அம்புட்டு வயசாகியும் ஆளு தவங்கல. கட்டுக் கட்டுனு கெதிக்க நடப்பாரு. ஒரு எடத்துல நிக்க மாட்டாரு. மல்லங்காடு செடிங்காடுன்னு அலையணும். இல்லன்னா ஒறக்கம் வராது."

"வயசான காலத்துல மொடக்கி எந்திரிக்காம தோரிணியெதுக்கு."

"அதுல ஒரு கிறுக்கு."

"அதென்ன கிறுக்கு."

"அப்படிக் கேளு. என்னகாரியம் பண்ணுவாரு தெரியுமா. மரக்கொப்புல பச்சிக உக்காந்து சிக்கெடுத்துச் சீராடுற நேரத்துல தூவி உதுந்து கெடககுமில்ல,"

"ஆமா."

"அதுகள மெனக்கிட்டுப் பெறக்கீட்டு வாறது. வந்து ஒண்ணொண்ணுக்கும் உச்சியில குஞ்சம் வச்சுப் புடுங்கி காம்ப நறுக்கி நூலச் சுத்துறது. அதுதான் கைப்புடி...அவருக்கு சோறுகூட பெரிசில்ல. தூவிகள வச்சு காது கொடையிற சொகந்தான் பெரிசு. மனுசன் கண்ணச்சொருவீட்டு அலகுசாச்சுக் கொடையிறதப் பாக்கப்பாக்க எச்சூறும்."

"நல்லாத்தான் இருக்கும் என்ன தாத்தா."

"கழுகுலருந்து குருவி வரைக்கும் வீட்டுச் சொவர்ல வெத வெதமா தூவி குத்தியிருக்கும். ஒறக்கத்துக்கு ஒண்ணு கெறக்கத்துக்கு ஒண்ணுன்னு கணக்கு. கண்ணுட்டுப் பாக்காமயே இன்ன தூவின்னு சொல்லிப்புருவாரு. நம்ம வாய்க்கு நெல்லுச்சோறு சோளச்சோறு ருசி மாதிரி அவரு காதுக்கு தூவி ருசி தெரியும்... அவருக்கு பார்வ கொஞ்சங்கூட மங்கல. சித்தெறும்பு என்ன பண்டத்தத் தூக்கீட்டுப் போகுதுன்னு நின்னமானிக்கி துல்லியமா சொல்லுவாரு. எங்கயாச்சும் புதுசா ஒரு பச்சி தட்டுப்படுதுன்னு தெரிஞ்சா போதும். கெட்டுச் சோறு கெட்டீட்டுக் கெளம்பீருவாரு. அதோட துவியக் கொண்டு வந்து ஆசதீரக் கொடையாம ஓயமாட்டாரு...என்னேரமும் மேல ஓட கோணப் புளியமரத்தடியிலதான் அவருக்குப் படுக்க..."

"வகுத்துக் கோளாறா."

"ஒங்களமாதிரி கழிஞ்சிட்டு அலையிறவருன்னு நெனச்சீகளா."

"பெறகு என்ன செய்வாரு."

"மல்லாக்கப் படுத்துக்கிட்டு புதுசு புதுசா மரத்துக்கு வாற குருவிகள நோட்டம் பாப்பாரு."

"தூவிக்கு அண்டம் போடுறது."

"சீமையில இல்லாற குருவியெல்லாம் புளியமரத்துக்கு வந்துபோகும். காலத்துக்குக் காலம் வேறவேற சாதியா வரும். அங்கயே கூடு கெட்டி குஞ்சி பொறிச்சுப் பறவகாட்டி கூட்டீட்டுப் போறதும் உண்டு. அதுக இப்படி வாற சங்கதி ராசா காதுக்கு எட்டுச்சு. அவருக்கு ஆவலு குளிராட்டி ஒடனே குருதமேல கெளம்பீட்டாரு. அவருக்கு முன்னாலயும் பின்னாலயும் பத்துப் பதினஞ்சு குருதையில ஆளுக"

"அடிச்சக்க. நம்மூருக்கு வாறாகளா."

"அந்தக் கூத்த ஏன் கேக்க. பொக்கு முத்துக் கெழடுக்கு தூவிமேல கிறுக்குன்னா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ராசாவுக்கு பச்சிகளப் பாக்கிறதுல பேக் கிறுக்கு. தலைக்குமேல வேல கெடந்தாலும் தூக்கி யெறுஞ்சிட்டுப் போயிருவாரு. ஒவ்வொரு சமயம் சேந்தாப்புல அஞ்சாறு நாளைக்குக் கூட அரமனைக்குத் திரும்பமாட்டாரு. சோறு தண்ணியப் பத்திக் கவலையில்லாமச் சுத்து வாரு. ராணியம்மாளுக்கு மனசு எப்படி யிருக்கும். நாலா பக்கமும் ஆளுவுட்டுத் தேடச் சொல்லும். தேடிப் புடிச்சா எங்கயாச்சும் ஒதுங்கலான எடத்துல குருதைய மேய வுட்டுட்டு குருவிகளைப் பாத்து சிரிச்சுக்கிட்ருப்பாரு.''

''நல்லராசாதான் வேடிக்கையான ராசா.''

''நம்மூருப் புளியமரத்துக்கு வாறாகளா.''

''வாறாக.''

''மரத்துக்கீழ படுத்துக் கெடந்த பொக்கு முத்துக் கெழடு அருவங்கேட்டு தலையத் தூக்கி மேற்காம திரும்பிப் பாக்காரு. பாத்தா ஒடப்பாதையில வரிசையா குருதைக வருது. மேல உக்காந்துருக்கிற ஆளுக எம்பி எம்பிக் குதிக்காக. கொஞ்சதூரம் வந்ததும் எறங்கி அங்கங்க குருதைகள கெட்டிப் போட்டுட்டு நடந்து வாறாக. நம்ம கெழடுக்குன்னா பயம். எந்திரிச்சு ஓடீறலாமான்னு நெனப்பு. பெறகும் ஒரு தைரியம். ஏன் ஓடணும். எதவும் களவாண்டுருக்கா. அவுக வந்தா வரட்டுமே. கேட்டா வெசயத்தச் சொல்லிட்டுப் போறது... மடியிலருக்கிற தூவிகள இறுக்கி முடிஞ்சுக்கிட்டு ஒண்ணுந் தெரியாறதுபோல படுத்துக் கெடக் காரு.''

''வசமா மாட்டிக்கிட்டாரு.''

''ராசா கிட்டத்துல வந்து நிக்காரு. காலுல ஒருமாதிரி கோணச் செருப்பு மூக்க வெடச்சுக் கிட்டு. என்ன நடக்கப் போகுதோ ஏது நடக்கப் போகுதோன்னு மத்த ஆளுகளுக்கு நெஞ்சு திக்கு திக்குனு அடிச்சுக்கிருது. ராசா ஒண்ணும் பேசல. மொகத்துல சன்னமா ஒரு சிரிப்பு. அப்படியே கெழடுக்குப் பக்கத்துல படுக்காரு. அப்பயும் கெழடு எந்திரிக்கல. ராசா மரத்தப் பாக்காரு. அடேயப்பா மரத்துக்குள்ள இன்ன குருவிதான்னு இல்ல. அததுபாட்டுக்கு தாராம் பூரான்னு பேசீட்டுத் திரியிதுக. ராசாவுக்கு சந்தோசம் தாங்கல. பெறகென்ன ரெண்டு பேரும் அந்தக் குருவிக்கு வாலு இப்படி இந்தக் குருவிக்கு கொண்ட அப்படி எதெது எப்பெப்ப எங்க நிக்கும் என்னத்தத் திங்கும்னு காசலையா பேச்சுப் பழக்கத்துல கூடீட்டாக. கூட வந்தவுக வாயப் பொத்தீட்டு அவுக பேசுறத வேன்னு பாத்துட்ருக்காக.''

''நல்லவேள பெழச்சாரு.''

''பேச்சுப் பழக்கம் போட்டு ராசா புளிய மரத்தவுட்டுக் கௌம்புறதுக்குள்ள குருத ரெண்டுதேரம் சாணி போட்ருச்சு. அதுவரைக் கும் கெழடு ராசாவப்பத்தி ஆரு எவருன்னு ஒரு வார்த்த கேட்டுக்கிறல. அவரும் சொல்லிக் கிறல. கடேசியில பெறப்புடும் போது முதுகத் தட்டிக் குடுத்துட்டுச் சொல்றாரு நான்தான் இந்தச் சீமைக்கு ராசான்னு. கெழடுக்கு ஒண் ணுமே ஓடல. கையுங்காலும் ஒதறலெடுக்குது. இன்னேரவரைக்கு கிட்டத்துல இருந்தது ராசாவா. தெரியாமப் போச்சே. மொதல்லயே கேட்ருக்கணும். பேச்சு மும்முரத்துல எல்லாம் மறந்துருச்சு. அவரென்ன புது மனுசன் மாதிரியா நடந்துக்கிட்டாரு. வந்தது ராசா தானா. சந்தேகமேயில்ல. ராசாவேதான். இந்த ஒடல்கட்டும் மொகலச்சணமும் வேற எவனுக்கும் இருக்காது. இன்னாருன்னு தெரிஞ்சா இம்புட்டுப் பேசியிருக்கமாட்டமே. அவருக்குத் தெரியாற சங்கதியா. மனசுல என்ன நெனச்சுக்கிருவாரோ...கெழடுக்கு ரெம்ப ஒளச்சலு. இருந்தாலும் ஒருபக்கம் சந்தோசம். ஏழு செம்மத்துக்கும் ராசாவ இப்படி கிட்டத்துல பாக்க முடியுமா பேச முடியுமா. அவருக்கு இருப்புக் கொள்ளல. தவக்குத் தவக்குனு ஊருக்கு ஓடி சங்கதியச் சொன்னாரு. அவ்வளவு தான் ஊரே தெரண்டு ஊருணிக்கு வந்துருச்சு. அதுக்குள்ள குருத பறிஞ்சுபோன எடந் தெரியல.''

''எல்லாரும் ஏமாந்துட்டாகளா.''

''கெழடுக்கு வசவு கெடச்சதுதான் மிச்சம். அவர நம்பாம ஒரு மாதிரியா பாத்தாக. அறுவதுக்கு மேல கிறுகிறுப்புன்னு எக்காளம் பேசுனாக. அவரு நாலுபேர குருத கெட்டிக் கெடந்த எடத்துக்குக் கூட்டீட்டுப் போயி சாணியக் காட்டுனப் பெறகுதான் நம்புனாக... அதுக்குப் பெறகு ஊருக்குள்ள அவருக்கு ரெம்ப மரியாத. ராசாவப் பாக்கணும் பாக்கணும்னு சிறிசுலருந்து பெரிசுவரைக்கும் ஆலாப் பறக்காக. ஊருணியச் சுத்திச் சுத்தி வாறாக. ஆனா கெழடுக்கு அந்த ஆச போயி புதுசா ஒண்ணு தொத்திக்கிருச்சு.''

''அது என்ன ஆச தாத்தா.''

''இப்பேர்ப்பட்ட அழகேந்திரனா இருக்கிற ராசா எப்பேர்ப்பட்ட சாப்பாடு சாப்பிட மாட்டாரு. காயில எத்தன கறியில எத்தன வகையோ. பழவர்க்கம் எத்தனையோ. அத நெனச்சுக்கூடப் பாக்க முடியுமா. அப்படி வசதியாச் சாப்பிடுறவரு கொல்லைக்கிருந்தா எப்படியிருக்கும். அதப் பாக்கிறதுக்காச்சும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குடுத்து வைக்கணுமே...அவரு மனசுல இந்த நெனப்புதான் ஓடுது."

"ஆசையப் பாரு."

"அடே இதுல என்னடா தப்பு. ஒரு மனுசனப் பாக்கிறதுக்கு மட்டும் ஆசப்படலா மாக்கும். பாத்து என்னத்த அள்ளிக் கெட்டீறப் போறாக. அதப் போலதான் இதும். இவருக்கு அந்த மாதிரி தோணியிருக்கு."

"அதப்போயி எப்படிப் பாக்க முடியும் தாத்தா."

"பாத்துட்டாரே."

"பாத்துட்டாரா."

"ஆமாமா நல்லா பாத்தாரு. எப்படின்னு கேக்கயா. அஞ்சாறு மாசங் கழிச்சு ஒரு நா ராசா புளியமரத்துக்கு வந்தாரு. ஆனா அங்க பொக்குமுத்துக் கெழடக் காணும். ஒடனே ஆளனுப்பி கூட்டீட்டு வரச் சொன்னாரு. கெழடுக்கு ரெம்பக் கூச்சம். அண்ணைக்குப் போல அன்னியோன்னியமா இருக்க முடியல. எட்டத்துல நின்னுக்கிட்டு விழுங்கி விழுங்கிப் பேசுனாரு. ராசாவுக்கு சப்புனு போச்சு. இதுக்குப் போயி கோவிச்சுக்கிற முடியுமா. நொந்து நொடிஞ்சு உக்காந்துட்டாரு. மரத்துல குருவிகளப் பாக்கிறதுக்குப் பிரியமில்ல."

"கெழடுக்கு என்ன வந்துருச்சு."

"எதுக்க நிக்கிறது ராசாவாச்சே...ஊருணிக் கரையச் சுத்தி சனங்க எறும்பு மாதிரி மொச்சுக் கிட்டு வேடிக்க பாக்காக. கிட்டப்போயிப் பாக்கிறதுக்கு ஆருக்கும் தைரியம் வரல."

"ராசா சும்மாருந்தாலும் மத்தவுக வைவாகளே."

"ராசா உக்காந்துருக்காரா."

"ஆமா."

"இருந்திருந்தாப்புல அவருக்கு வகுத்தப் பெரட்டீருச்சு. மூஞ்சிய மூஞ்சியச் சுளிச்சாரு. இடுப்பப் புடிச்சாரு. கூட வந்தவுகளுக்கு புரிஞ்சு போச்சு. ஊருணிக்கு ஓடி சனங்கள கலஞ்சு போகச் சொன்னாக. நல்ல வாளியொண்ணு வாங்கி தண்ணி கோலீட்டு ஓடி வந்தாக. வாளி குடுக்கிறதுக்கு நான் முந்தி நீ முந்தின்னு பொம்பளைக அடிச்சுக்கிட்டதப் பாக்கணுமே."

"சண்ட நடந்திருக்கும்."

"தண்ணி வந்து சேந்ததும் ராசா மேல ஓடைக்குள்ள அவசரமா எறங்கினாரு. எந்திரிச்சு வர நேரமாச்சு. நம்ம கெழடுக்கு இப்ப ராசாவப்பத்தி நெனப்பில்ல. ஒப்புக்கு நாலு வார்த்த பேசுனதோட சரி. எப்படா போவாருன்னு இருந்துச்சு. ராசாவும் வெள்ளனவே பெறப்புட்டுப் போயிட்டாரு. போனதுதான் தாமுசம். கெழடு ஓடைக்கு ஓடுனாரு. அங்கயும் இங்கயும் தேடிப் பாத்தாரு. சின்னப் பாறையில பசப்பசன்னு ஒரு குமி தட்டுப்பட்டுச்சு. கிட்டப் போனாரு. அதேதான்."

"கண்டு பிடிச்சிட்டாரு."

"கிட்டத்துல பாத்ததும் அவருக்கு மொகம் இத்தினியா சிறுத்துப் போச்சு. மன சுக்குள்ள கெட்டிவச்சிருந்த ஆசையெல்லாம் காத்தாப் பறந்துருச்சு. சே! இதுக்குத்தானா இந்தப்பாடு பட்டம்னு வெக்கம் புடுங்கித் தின்னுருச்சு. வெத்துவாளிய லாத்திக்கிட்டு வீட்டுக்கு வந்துட்டாரு...அண்ணைக்கோட சரி. அதுக்குப் பெறகு புளிய மரத்துப் பக்கம் எட்டிப் பாக்கிறதே இல்ல."

"தூவிக்கு என்ன செஞ்சாரு."

"தூவி வேணும்னா தொலவட்டுக்குப் போயி பெறக்கீட்டு வருவாரு."

"நீங்க அவரப் பாத்துருக்கீகளா."

"நான் பாத்துக்கிட்டதுல்ல. எங்க தாத்தா சொல்லத்தான் கேள்வி."

"ராசா இருந்ததுனால அந்த ஓடையப் புடிச்சுக் கிட்டீகளாக்கும். நீங்க எந்த ராசாவப் பாக்கப் போறீக."

"நீங்கதாண்டா ராசா. எங்களால பாதையில உககார முடியுமா. நீங்க கண்ட எடத்துல மோளுவீக பேலுவீக. ஒங்களப் பாத்துட்டன்ல அது போதும். போறென்."

நாலுபேரும் தாத்தாவைச் சுற்றி வளைந்தார்கள்.

"ஓடைக்குள்ள நீங்க போட்டத மழத் தண்ணி அரிச்சிட்டு வந்து ஊருணியில கலக்குது."

"ஊர்ச்சனம் அந்தத் தண்ணியக் குடிக்குது."

"தாத்தாவுந்தான் போகயிலயும் வரயிலயும் குடிக்காரு."

"குளிச்சுக்கிட்டே குடிக்காரு."

"குண்டியக் கழுவிக்கிட்டே குளிக்காரு."

"அதனால ஓடதான் இவருக்குத் தோது." தாத்தா கேட்டார்.

www.tamilarangam.net



மலைச்சாரலில் குரங்குகள்
படித்துறையில் மீன்கள்
பூந்தோட்டத்தில் வண்ணத்துப்பூச்சிகள்
பேசப் பேசப்
பேசப் பேச
வெட்டிப்பேச்சுதான் தான்
விவாதிக்க விவாதிக்க
விவாதிக்க விவாதிக்க
வீண் விவாதம்தான் தானே
யோசிக்க யோசிக்க
யோசிக்க யோசிக்க
விருதாயோசனைதான் தன்னானே
திட்டமிடத் திட்டமிடத்
திட்டமிடத் திட்டமிட
வெற்றுத்திட்டம்தான் தன்னன்னானே
தான் தானே தன்னானே தன்னன்னானே
தானே தன்னானே தன்னன்னானே தான்
தன்னானே தன்னன்னானே தான் தானே
தன்னன்னானே தான் தானே தன்னானே.

— விக்ரமாதித்யன்

இன்றைக்கு
நல்முகூர்த்தம்
நான்
பேசவே போவதில்லை
குடித்துக் கொண்டிருக்கிறேன்
குடிக்கிற சுகத்துக்காக
ராத்திரியில்
இடம்தெரியாமல்
திசைதெரியாமல்
அலைந்துகொண்டிருக்கிறது
சில எளிய உயிர்கள்
அதில் ஒருவன் நான்

— விக்ரமாதித்யன்

---

''அதுக்காக பாதையிலயா இருக்கிறது. மனுசரு நடக்கவேண்டாமா.''

அவர்கள் விடவில்லை.

''நீங்க இதுவரைக்கு வந்த பாத ரெம்பச் சுத்தமோ.''

''வந்த பாதையிலயே வீட்டுக்குத் திரும்பிறப் போறீகளா என்ன.''

''தாத்தாவுக்கு இந்தப் பாத சரியில்ல.''

''அப்படின்னா வெலகி நடங்க புதுப் பாதையில.''

''வெலகி நடந்து எங்க போயிறப் போறீக. ஓடைக்குத்தான.

''அங்கபோனா ஒங்களுக்கு முந்தியே ஒருத்தரு உக்காந்துட்ருப்பாரு.

''அதெதுக்கு வம்பு. பேசாம இந்தப் பாதையிலயே பேண்டுட்டுப் போங்க.''

தாத்தா வைராக்கியமாச் சொன்னார்.

''சேட்டக்காரப் பெயகளா. நான் ஓடைக் கொண்ணும் போகல. ஊருணியில அழுக்குத் தீர குளிக்கப் போறென்.''

''குளிச்சிட்டு வந்து கோயிலுச் சொவருல முதுகச் சொறிஞ்சுக்கிட்டே வெயிலுக் காய்வீக.''

''ஊருணி மரத்தடியில காக்கா குருவிப் பீமேல துண்ட விரிச்சு ஒறங்குவீக.''

அவர் நழுவப் பார்த்தார்.

''ஒங்ககிட்ட என் தொண்டத் தண்ணியக் குடுக்க முடியாது. இங்கயே நில்லுங்க நான் வெலகிப் போறென்.''

புல்லெலி சத்தமாகச் சொன்னான்,

''தாத்தா புதுப்பாத போடுறாருடோய்.''

''இவருக்கு முன்னால நம்ம ஓடுவொம்.''

சிட்டன் ஓடத் தயாரானான்.

''இஞ்சின் போகுது. டக்கு பின்னால வரட்டும். கடைசியில் பாரவண்டியவும் இழுத்துட்டு வாங்க.''

தாத்தா நாக்கைத் துருத்தினார்.

''பாரவண்டியா... இருங்க இருங்க.''

இஞ்சினுக்குப் பின்னால் மூணுபேரும் கொழுவிக் கொண்டார்கள்.

'''சிக்குச் சிக்கு... சிக்குச் சிக்கு...'
''ஊ...''

''ஊருணிக்கு ஓடிப்போ
குண்டியத்தான் கழுவிக்கோ.''

வண்டி தாத்தாவைத் தாண்டி வளைந்து வளைந்து ஓடிக்கொண்டிருந்தது. □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாகாண சபை பழிவாங்கும் சபையாக செயல்படுகிறது

## ஈரோஸ் வே. பாலகுமாரன்

(இரண்டரை ஆண்டுகால இடைவேளைக்குப் பினபு ஈழத்திலிருந்து ஈழப் புரட்சி அமைப்பின் (ஈரோஸ்) பொதுச் செயலாளர் தோழர் வே. பாலக்குமாரன் 1990 சனவரி இரண்டாம் வாரத்தில் தமிழ்நாட்டிற்கு வந்திருந்தார். அப்போது அவர் பாலம் இதழிற்கு அளித்த பேட்டி)

**தமிழ்நாடு முதலமைச்சருடன் தாங்கள் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றி...**

தமிழக முதல்வர் இப்போது எடுத்திருக்கக் கூடிய முனைவானது, முயற்சியானது சாதாரண, சில்லறை அரசியல் சமாச்சாரங்களுக்கு அப்பாற்பட்டதாகும். அர்த்தமுள்ளதோர் அரசியல் தீர்வைக் கொண்டுவர வேண்டும் என்று அவர் உண்மையாகவே விரும்புகிறார். அவருடன் இரண்டுமுறை பேச்சுவார்த்தை நடத்தினோம். அப்போது மூன்று கோரிக்கைகளை முன்வைத்தோம். அவை:

1. தமிழ்த்தேசிய இராணுவம் எனப்படும் அமைப்புக்காக வலுக்கட்டாயமாகச் சேர்க்கப்பட்ட இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டு தத்தம் பெற்றோர்களிடம் சேர்க்கப்பட்டாக வேண்டும். தமது எதிர்காலத்தைத் தாமே தேர்ந்துகொள்ளும் உரிமை அவர்களுக்கு வேண்டும். எனவே, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈபிஆர்எல்எப்) அமைப்பு உடனே இவர்களை விடுதலை செய்ய இந்திய அரசு வலியுறுத்த வேண்டும். தற்போது நடக்கும் அதிகாரத்துக்கான யுத்தத்தில் இவர்கள் அநியாயமாகப் பலியாவது உடனே தடுக்கப்பட்டாக வேண்டும்.

2. ஆயுதங்கள் பற்றிய பிரச்சினையில் ஈரோஸ் உட்பட அனைத்துக் குழுக்களிடமும் ஆயுதங்கள் இருக்கின்றன. இப்படி ஆயுதங்களுடன் நடமாடுவது சட்டரீதியானதா, இல்லையா எனபதல்ல இப்போதைய பிரச்சினை. ஆயுதங்களைக் கைவிடுவது என்பது இப்போதைக்கு முடியாத ஒரு விஷயமாகும். ஏனெனில் கையளிக்கப்படும் ஆயுதங்களைப் பெறுவதற்கான நடுநிலையானதோர் அமைப்பு என்று இப்போது எதுவுமில்லை. மேலும் இளைஞர் குழுக்களையும் மக்களையும் பாதுகாப்பதற்கான அமைப்பு எதுவும் இப்போது ஏற்படவில்லை. எல்லோருமே ஆயுதங்கள் வைத்திருப்பதையே அவரவர் பாதுகாப்புக்கான உத்திரவாதமாக நினைக்கும் இச்சூழலில் ஆயுத ஒப்படைப்பு என்பது ஒரு பிரச்சினையாக ஆக்கப்படக்கூடாது.

3. 1988 நவம்பர் மாதம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சபைக்கு மக்களிடையே ஆதரவோ இணக்கமோ இல்லை, ஏனெனில் அப்போது தேர்தலானது மிக சந்தேகத்துக்கிடமானதொரு சூழலில் நடந்தேறியது, நடத்தப்பட்டது. மேலும் அப்போது விடுதலைப் புலிகள், ஈரோஸ் ஆகியன அரசியல் கட்சிகளாகத் தம்மை மாற்றிக் கொள்ளாத சூழ்நிலை இருந்தது. அதன்பின் புதான் இவ்வமைப்புக்கள் அரசியல் கட்சிகளாக அங்கீகாரம் பெற்றன எனவே மாகாணசபைக்குப் புதுத்தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும். தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டாக வேண்டும். மாகாணசபைக்கு இலங்கை அரசு, தான் அளிப்பதாகக் கூறிய அதிகாரங்களைத் தரமுடியாமல் போனதுக்குக் காரணம், மாகாண சபையில் ஆளும் கட்சியான அமைப்பு பரவலாக இந்தியாவின் அடிவருடியாகக் கருதப்பட்டதுதான். இந்தச் சூழ்நிலையில் அதிகாரப் பங்கீடு நடக்காததற்கு இலங்கை அரசாங்கத்தை மட்டும் பழி சொல்லிப் பயனில்லை. எனவே, இவை பற்றி இந்திய-இலங்கை அரசாங்கங்களும் தமிழகஅரசாங்கமும் தமிழர் அமைப்புக்களுடன் பேசி ஓர் ஒத்திசைவான முடிவுக்கு வருவதே சரியாக இருக்க முடியும் என்று முதலமைச்சரிடம் கூறினோம்.

**அப்படிப்பட்ட ஒரு பேச்சுவார்த்தை எப்போது துவங்கலாம் என்கிறீர்கள?**

### மக்கள் உளவியல் ரீதியாகப் பாதிக்கபபட்டுள்ளனர்

www.tamilarangam.net





**ஆயுதங்கள் பற்றிய பிரச்சினையில் ஈரோஸ் உட்பட அனைத்துக் குழுக்களிடமும் ஆயுதங்கள் இருக்கின்றன. இப்படி ஆயுதங்களுடன் நடமாடுவது சட்டரீதியானதா, இல்லையா என்பதல்ல இப்போதைய பிரச்சினை. ஆயுதங்களைக் கைவிடுவது என்பது இப்போதைக்கு முடியாத ஒரு விஷயமாகும்.**

அதைவிட்டால் வேறு வழியே கிடையாது. எனவே, உடனே பேச வேண்டும். இவ்வகையான போக்கினால் யாருக்காவது சில அசௌகரியங்கள் ஏற்படுவது இயல்புதான். (உதாரணமாக, சுதந்திரமான சூழ்நிலையில் தேர்தல் நடந்தால் ஈபிஆர்எல்எப் வெற்றிபெற முடியாது என்பது தெரிந்ததே) ஆனால் எல்லோருமே இறுகிப்போன தமது நிலைப்பாடுகளிலிருந்து கொஞ்சம் கொஞ்சம் விட்டுக் கொடுத்தாக வேண்டியுள்ளது.

ராஜீவ் அரசாங்கத்தின் அணுகுமுறைக்கும் வி.பி. சிங் அரசாங்கத்தின் அணுகுமுறைக்கும் வேறுபாடு காண்கிறீர்களா?

நிச்சயமாக. கொள்கை ரீதியாகவும் வித்தியாசம் இருப்பதாக பத்திரிகைகளின் வாயிலாக படிக்கக் கூடியதாகவும் அறிந்து கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது. இருந்தாலும் புதிய அரசாங்கம் ஈழப் பிரச்சினையைப் பொறுத்தவரை திட்டவட்டமான ஒரு கொள்கையை முன் வைத்ததாக இதுவரை எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் இந்திய அமைதிப்படையைத் திரும்பப் பெறவேண்டும் என்பதிலே மட்டும் உறுதியாக இருப்பதாக எங்களால் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. ஆனால் எந்த அரசாங்கம் வந்தாலும் தமிழ்ப் பேசும் மக்களுடைய நலன்களை அடகு வைக்காமல் திரும்பவும் ஒரு ஒப்பந்தம் போல் ஒன்றை உருவாக்கி எங்களை அரசியல் அனாதைகளாக்கி, நாங்கள்விட்ட இடத்துக்கே திரும்பவும் செல்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும். இந்த முறை புதிய அரசாங்கமாவது தன்னுடைய முயற்சியின் பேரில் உண்மை நிலைமையை பூரணமாக உணர்ந்து, எந்தவிதமான அரசியல் சுயநலங்களையும் முன்வைக்காமல் தமிழ்ப் பேசும் மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டுமென்பது எங்களுடைய வேண்டுகோள்.

மேலும், அரசியல் தலைமைகளின் நிலைப்பாடு ஆக்கப்பூர்வமாக இருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் அதிகாரிகள், உளவுத்துறையினர், ராஜாங்கத் துறையினர் (diplomatic) ஆகியோர் 1987 ஜூலை ஒப்பந்தம் செய்து கொண்டதை ஒரு தவறாக ஒப்புக் கொள்ளவில்லை. அந்த ஒப்பந்தம் புதிய பல பிரச்சினைகளுக்கு ஊற்றுக் கண்ணாக இருப்பதை அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அரசியல் தலைமையைப் பொறுத்தவரை, இது தேர்தல் நேரம் அல்ல என்பதால் சில்லறை அரசியல் காரணங்களைவிடுத்து பிரச்சினைகளை ஆராய்வதற்கு ஏற்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. பிரச்சினையில் ஆதாயம் தேடும் சக்திகளின் ஆதிக்கம் குறைந்து போயுள்ளது.

தமிழக முதல்வரைப் பொறுத்தவரையில், அவருக்கு விடுதலைப்புலிகள் மற்றும் இந்திய அரசாங்கம் ஆகியவற்றின் நிலைப்பாடும் நன்கு தெரிந்துள்ளது.

தற்போதைய பேச்சுவார்த்தையில் எட்டப்படக்கூடிய புதிய நிலைப்பாடு எந்த மாதிரியான கருத்துக்களை உள்ளடக்கியதாக இருந்தால் தமிழ்ப்பேசும் மக்களுக்கு நலன் விளைவிக்கக் கூடியதாக இருக்குமென்று நினைக்கிறீர்கள்?

இந்தியாவைப் பொறுத்தவரை பாதுகாப்புப் பிரச்சினை என்ற ஒன்று இருப்பதாக நாங்கள் அறிகிறோம். குறிப்பாக இந்து சமுத்திரத்தில் தென்கிழக்கு ஆசியாவில் இலங்கைத் தீவு இந்தியாவுக்கு அன்மையில் இருக்கின்றபடியால் இலங்கைத் தீவினுடைய அரசியல், வெளி உலக அரசியல் கோட்பாட்டினால் இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகம்

**மக்கள் எல்லா இயக்கங்களையும் தண்டிக்கப் போகிறார்கள்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**தமிழ்ப் பேசும் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு பாராளுமன்றத்துக்கு அப்பாற்பட்டது என்பது எங்களுக்குத் திடமாகத் தெரியும். 70களில் நாங்கள் இயக்கம் ஆரம்பித்த பொழுதே நாடாளுமன்ற முறைகளுக்கு எதிராகத்தான் ஆரம்பித்தோம், நாடாளுமன்றத் தேர்தல் என்பது ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் நலனைப் பேணுவதற்கானது என்பதும் எங்களுக்குத் திடமாகத் தெரியும். ஆகவே அதிலே எங்களுக்கு எந்த மயக்கமும் இல்லை.**

ஏற்பட்டுக்விடக்கூடாது என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இலங்கையுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் அந்தப் புதிய ஒப்பந்தம் தமிழ்ப் பேசும் மக்களினுடைய நலன்களை அடகு வைத்துவிடக் கூடாது என்பதுதான் எங்கள் கருத்து. அதேசமயம் எங்கள் நலன்களை ஒப்பந்தங்கள் மூலமே தீர்த்துவிட முடியும் என்றும் நாங்கள் நம்பவில்லை. எனவே, எங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கமாகப் புரிந்து கொண்டு அவற்றிற்கு, மிகக் குறைந்த ஒரு வேலைத் திட்டத்தை அல்லது ஒரு ஃபார்முலாவை உருவாக்கவேண்டும். அதனை தமிழ்ப் பேசும் மக்களினுடைய பிரதிநிதிகள், இயக்கங்கள் இந்திய இலங்கை அரசுகள் மற்றும் தமிழக அரசு அனைத்தும் ஒருமித்து ஒரு நிலைப்பாட்டுக்கு வந்து அதனை ஒரு உடன்படிக்கை வடிவத்தில் கொண்டு வருவதை நாங்கள் விரும்புகின்றோம். அதைத்தவிர இந்தியாவும் இலங்கையும் தங்களுடைய பாதுகாப்புப் பிரச்சினைக்கு உரிய வகையிலே முரண்படாமல் செயல்படுவதற்கு நாங்கள் ஒருபோதும் தடையாக இருப்பது கிடையாது. உதாரணமாக, இந்திய—இலங்கை நட்புறவு ஒப்பந்தம் என்று ஒரு பேச்சு அடிபடுகிறது. இந்த நட்புறவு ஒப்பந்தத்தில் இந்திய—இலங்கை நலன்கள் பாதிக்கப்படாமல் அமைவதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அதேசமயத்தில் அதற்கு பலிகடாவாக எங்கள் உரிமைகளை அடகு வைக்க நாங்கள் விரும்பவில்லை. முன்னர் விட்ட தவறை விடாமல்—87 ஜூலை ஒப்பந்தத்தில் விட்ட தவறை—இந்த புதிய அரசாங்கம் ஒரு நிலைப்பாட்டை எடுத்துச் செயல்படவேண்டுமென்று நாங்கள் வேண்டிக் கொள்கிறாம்.

வட கிழக்கு மாகாணசபையின் அதிகாரம் பற்றி கொஞ்சம் விளக்கமுடியுமா?

1987 ஜூலை ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு முன்பு பிரதமர் ராஜீவ் காந்தி மூன்று உத்திரவாதங்களை எங்களுக்கு அளித்தார்.

1. இந்தியாவில் தமிழ்நாடு மாநிலத்துக்கு கிடைக்கக்கூடிய அளவு அதிகாரம் எங்கள் மாகாண சபைக்கு இருக்கும் என்றார். உண்மையில் மகாணசபை என்பது ஒரு மேல்பூச்சு விவகாரமாக ஆகிவிட்டது.

2. வடகிழக்கு பகுதிகள் இணைப்புக் குறித்து ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுஜன வாக்கெடுப்பு என்பது நடக்கப் போவதில்லை; எனவே வடகிழக்கு மாகாணம் என்பது பிளவுபடப் போவதில்லை என்றார்.

3. தமிழர்களது உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு என்றார். உண்மையில் தமிழர்கள் தினசரி கொல்லப்படுவதுதான் நடக்கிறது.

எனவே கடந்த இரண்டரை வருடங்களாக நடந்தவற்றை ஒரு மறுபரிசீலனைக்கு எடுத்துச் சென்றால்தான் இதுவரை நடந்துள்ள இழப்புக்களை உண்மையாக உணர முடியும். நிறைய தவறுகள் நடந்துள்ளன.

எல்லோருமே அவரவர் தவறுகளை ஒப்புக்கொண்டு பிராயச்சித்தம் செய்வதற்கான நிலை வந்துவிட்டது. உண்மையில் மாகாணசபை என்பது புலிகளுக்கும் இந்தியப் படையினருக்கும் ஏற்பட்ட மோதலின் போது புலிகளுக்கு எதிராக ஒரு அரசியல் சக்தியை உருவாக்குவதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்துவதற்காகத்தான் மாகாணசபை உருவாக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகியுள்ளது. இதன் பயனாக அது 'பழிவாங்கும் சபையாக' செயல்படுகிறது. எனவே இது பொறுத்தமான மாகாணசபையாக எங்களுக்குத் தெரியவில்லை.

பொதுவாகவே, தேர்தலில் நம்பிக்கையில்லை என்று சொல்லும் ஈரோஸ் எந்த அடிப்படையில் இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டது என்பதை அறிய விரும்புகிறோம்?

தமிழ்ப் பேசும் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு நாடாளுமன்றத்துக்கு அப்பாற்பட்டது என்பது எங்களுக்கு திடமாகத் தெரியும். 70களில் நாங்கள் இயக்கம் ஆரம்பித்த பொழுதே நாடாளுமன்ற முறைகளுக்கு எதிராகத்தான் ஆரம்பித்தோம். நாடாளு

## மாகாணசபைக்குப் புதுத்தேர்தல் நடத்தியாக வேண்டும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





**இலங்கை இராணுவம் காலங்காலமாக செய்த கொடுமைகளை, அட்டூழியங்களை இந்திய இராணுவம் செய்யத் தொடங்கியதும் மக்கள் திக்கென்று திடுக்கிட்டுப் போனார்கள். இராணுவம் செய்த தோடு மட்டுமல்லாமல் இயக்கங்களும் இதே மாதிரியான செயல்களில் இறங்கவும் மேலும் எம் மக்கள் திகைத்துப்போய் மனதில் ஒருவிதமான குழப்பமும் அதிர்ச்சியும் ஏற்பட்டு ஒருவிதமான உறைந்துபோன மன நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள்.**

மன்றத் தேர்தல் என்பது ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் நலனைப் பேணுவதற்கானது என்பதும் எங்களுக்குத் திடமாகத் தெரியும். ஆகவே அதிலே எங்களுக்கு எந்த மயக்கமும் இல்லை. ஆகையால்தான் மாகாணசபை அமைக்க இந்திய அரசு எங்களை அணுகிய போது நாங்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித் தோம். ஈழத்திலே அமைதியான நிலை இல்லை; புலிகளும் அதில் பங்குபற்றவில்லை. எனவே நாங்கள் பங்குபற்ற முடியாது என்று சொன்னோம். ஆனால் இந்த மாகாணசபையை உருவாக்கி அதை மக்களின் பிரதிநிதி யாக உருவகித்து அந்தப் பொம்மை அரசை ஒரு நிரந்தர தமிழ்ப் பேசும் மக்களின் அங்கீ காரத்துக்கு அடையாளச் சின்னமாக காட்ட முற்பட்ட பொழுது அது தவறு என்று சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் எங்களுக்கு ஏற்பட்டது. மக்களுடைய கருத்துக்கு முரண்பட்டது என்று சொல்ல வேண்டிய தேவை எங்களுக்கு ஏற் பட்டது. அதன் பயனாகத்தான் நாங்கள் பொதுத் தேர்தல் நடந்த பொழுது விருப்ப மில்லாமல்—நாங்கள் முன்னர் சொன்ன கொள்கை நிலைப்பாட்டுக்கு மாற்றம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. அந்தத் தேர்தலிலும் மக்கள் பங்கு பெற்று அமோகமாக வாக்களித்தார்கள். தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு கடைப்பிடித்த கொள்கைகள் தவறு. மாகாணசபை சரியாக இயங்கவில்லை. மக்கள் மாற்றத்தைக் கோரி நிற்கிறார்கள். போர்நிறுத்தம் வேண்டும். புலிகளும் பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்படவேண்டும் என்பதன் அடிப்படையில் தேர்தலில் நின்று அதை நாங் கள் வெற்றியாக செயல்படுத்திக் காட்டினோமே அல்லாமல் நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என்ற நோக்கம் அல்ல. உண்மையில் நாடாளு மன்றத்தைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்றுதான் நாங்கள் முடிவெடுத்திருக்கிறோம். அப்படியும் மூன்று நான்கு மாதங்கள் நாடாளுமன்றத் துக்குள் நுழையாமல்தான் இருந்தோம். அதன் பின்னர் மாகாணசபையும் அதைச் சார்ந்த சக்தி களும் எங்களை முற்றாக அழித்து நிர்மூலமாக்க நினைத்தபோது, எங்கள் குரல்வளையை நசுக்க முற்பட்ட போது, எங்கள் கருத்துக்களை வெளிக் கொண்டு செல்வதற்கு ஒரு களமாக, ஒரு பிரச்சார மேடையாக அதனை பயன்படுத்தி சட்டரீதியான பாதுகாப்பைப் பெற வேண்டும் என்ற அடிப்படையில்தான் பாராளுமன்றம் சென்றோமே அல்லாமல் வேறு எந்த அடிப் படையிலும் அல்ல.

> மிக நெருக்கடியான ஒரு சூழ்நிலையில் இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் நடந்த போது ஈரோஸ் சார்பான வேட்பாளர்கள் யார் என்ற விவரம் கூட சரியாக அறிவிக் கப்படாமல், தமிழ்ப் பகுதியில் பெற்ற மகத்தான வெற்றி தமிழ்நாட்டு மக்களை வியக்க வைத்தது. அவ்வளவு மக்கள் செல்வாக்கைப் பெற்றிருக்கிற ஈரோஸ் 'வட கிழக்கு மாகாணசபை' கலைக்கப் பட்டு மறு தேர்தல் நடந்தால் அந்தத் தேர்தலில் பங்குபற்றப் போவதில்லை என்று சொல்கிறதே! ஏன்?

எங்களைப் பொறுத்தவரையில் நாடாளு மன்றத் தேர்தலில் பங்குபற்றுவது என்பது எங்களுடைய கொள்கை நிலைப்பாடு அல்ல. அந்தந்தக் காலகட்டத்தில் ஏற்படும் தேவையின் நிமித்தம் நாங்கள் பங்கு பற்றுவோம். அல்லது பங்குபற்றாமல் விடுவோம். ஆனால் மாகாண சபைத் தேர்தல் என்பது ஓர் அதிகாரப் போட்டி யாக மாற, ஒரு அரசியல் மூன்றாந்தரமான இடத்துக்கு இட்டுச் செல்லும் பிரச்சார மேடைக்கு நாங்கள் செல்லத் தயாராயில்லை. அவ்வாறு இல்லாமல் உண்மையாக, மக்கள் கருத்துக்கு மதிப்பளிக்கும் வகையில் அந்தத்

## ஒருமித்த நிலைப்பாட்டுக்கு சம்பந்தப்பட்டோர் வரவேண்டும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**மக்களின் அபிப்பிராயம், கருத்து என்பது உறைந்துபோனதொரு நிலையில் உள்ளது அவர்கள் என்னதான் நினைக்கிறார்கள் என்பது யாருக்குமே தெரியாது. உண்மையில், யாருமே அவர்களுடன் நின்று, வாழ்ந்து, அவர்களது உணர்வுகளைப் புரிந்து கொள்ளவில்லை. இதுதான் உண்மை. நாங்கள் உட்பட அனைத்துக் குழுக்களையுமே மக்கள் தண்டிக்கப் போகிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்களது துயர அனுபவங்கள், எங்களுடையவற்றைக் காட்டிலும் வேறு எந்தக் குழுவைக் காட்டிலும் அதிகமானவை. சாமானிய மனிதர்களைக் காட்டிலும் அரசியல் அமைப்புக்களில் உள்ள எங்களைப் போன்றவர்கள் அதிகப் பாதுகாப்புடன் இருக்கிறோம் என்பது தான் உண்மை.**

தேர்தல் நடத்தப்படுமென்று சொன்னால் அத் தேர்தலில் பங்கு பற்றுவது பற்றி பரிசீலனை செய்யலாம். தேர்தலில் பங்குபற்றுவது எங்கள் கொள்கை அல்ல என்பதும் அந்தச் சந்தர்ப்பங்களுக்கேற்ப தேர்தலில் பங்குபற்றுவது பற்றி முடிவெடுப்பதுதான் எங்களுடைய பொதுவான நிலைப்பாடு. ஆனால் இன்னொரு முறை தேர்தலில் பங்குபற்றி 'நாங்கள் மக்களுடைய அங்கம்' என்று காட்ட வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. ஏற்கனவே, நாங்கள் நாடாளுமன்றத் தேர்தலில் நிரூபித்திருக்கிறோம். ஆனால் இயக்க மோதல்களும் கழுத்தறுப்புப் போட்டிகளும் நடக்கின்ற இப் போதைய சூழ்நிலையில் நாங்கள் ஒரு மேலதிகப் போட்டியை உருவாக்கி அதன்மூலம் அழிவுகளுக்கு இட்டுச் செல்வதை விரும்பவில்லை. ஆகையால்தான் நாங்கள் அதிலிருந்து விலகியிருக்க விரும்புகிறோம்.

**இந்தியப்படை இலங்கையில் நுழைந்தது பற்றியும் இப்போது வெளியேறி வருவது பற்றியும் ஈழ மக்கள் என்ன நினைக்கிறார்கள்?**

நாங்கள் இந்தியாவில் தங்கி பணியாற்றிய காலத்தில் ஈழ மக்கள் இந்தியாவையும் தமிழ் நாட்டையும் பார்த்த கண்ணோட்டம் மிகவும் வித்தியாசமானது. அதற்கு நாங்களும் ஒரு காரணம். நாங்கள் தமிழ்நாட்டில் தங்கியிருந்து தமிழ்நாட்டு உணர்வுகளைத் தட்டியெழுப்பி அதற்கு ஊடாக எங்கள் கருத்துக்களைச் செலுத்தியபொழுது இந்தியாவையும தமிழகத்தையும் எங்களின் பாதுகாவலர்களாகவும் ஆதரவாளர்களாகவும் எம் மக்கள் நினைத்தனர்; குறிப்பாகத் தமிழகத்தை. ஆகவே ஒப்பந்தம் ஏற்பட்ட பொழுது மனக் கசப்பு ஏற்பட்டாலும் இந்தியப் படை வந்த பொழுது இயக்கங்கள் எதுவுமே தொடக்கத்தில் எதிர்ப்பைக் காட்டவில்லை. தவிர்க்கமுடியாமல் வேண்டா வெறுப்பாக ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு கட்டம் வந்தாலும்கூட இந்தியப் படை இலங்கையில் வந்து சிறிலங்கா இராணுவத் தொல்லைகளைக் குறைப்பார்கள் என்று ஒரு விதமான எதிர்பார்ப்போடு இந்தியப்படையை மக்கள் வரவேற்றார்கள். ஆனால் காலக் கிரமத்தில் இலங்கை இராணுவம் காலங்காலமாக செய்த கொடுமைகளை, அட்டூழியங்களை இந்திய இராணுவம் செய்யத் தொடங்கியதும் மக்கள் திக்கென்று திடுக்கிட்டுப் போனார்கள். இராணுவம் செய்ததோடு மட்டுமல்லாமல் இயக்கங்களும் இதே மாதிரியான செயல்களில் இறங்கவும் மேலும் எம் மக்கள் திகைத்துப் போய் மனதில் ஒருவிதமான குழப்பமும் அதிர்ச்சியும் ஏற்பட்டு ஒருவிதமான உறைந்து போன மனநிலைக்கு தள்ளப்பட்டு விட்டார்கள். ஆகவே அந்த மனநிலையை யாராலும் வெளியில் சொல்லவும் இயலாது. ஆரம்பத்தில் சிறிலங்கா இராணுவத்தினுடைய துவக்கு முனையிலும் பிறகு இயக்க மோதல்களில் திகைத்தும், பிறகு இந்திய இராணுவத்தினுடைய அட்டூழியத்திலும் சீரழிந்து மக்கள் மிகுந்த... என்னவென்று எனக்கு விளக்கிச் சொல்லத் தெரியவில்லை.

ஒருவிதமான மனநிலையில் எம் மக்கள் இருக்கிறார்கள். ஆகையால் இப்பொழுதும் அவர்களுடைய கருத்து யாது என்று அறிய முடியாது. திரும்பவும் அவர்களைத் தட்டிக் கொடுத்து, ஆறுதல்படுத்தி அமைதியான ஒரு சூழ்நிலைக்கு அவர்களை இறக்கி சுதந்திரமாகப் பேசக்கூடிய ஒரு மனநிலையையும் சூழ்நிலையையும் உருவாக்கி அவர்களைப் பேச வைத்த பிறகுதான் அவர்கள் கருத்து என்னதென்று அறிந்து நாங்கள் சொல்லமுடியும். அதற்கு முன்னால் அப்படியான ஒரு சூழ்நிலையை முதலில் உருவாக்க வேண்டும். நாங்கள் இப்போது சொல்கிற சில வழிமுறைகள் அதற்குத்தான் வழி வகுக்கும். இன்றைக்கு அவர்கள் இந்தியப்படை தொடர்பாக எந்தக் கருத்தையும் சொல்லத் தயாராக இல்லை.

## நாடாளுமன்றம் எமக்குப் பிரச்சார மேடைதான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





**இதில் ஒரு முக்கியமான குறிப்பு என்னவென்றால், ஆரம்பத்தில் நாங்கள் இந்தியாவுக்கு வந்தபொழுது இந்தியாவில் எத்தனை உளவுத் துறைகள் இருக்கிறது என்பது போன்ற விபரங்கள் எமக்குத் தெரியாது. இந்தியாவின் நிர்வாக அமைப்பும் எங்களுக்குத் தெளிவாகத் தெரியாது. ஆனால் காலப்போக்கில் நாங்கள் இவற்றை அவதானித்தபோது பல உளவு ஸ்தாபனங்கள், இந்திய வெளியுறவுத் துறை, இந்தியப் பாதுகாப்புத் துறை, இலங்கை-இந்தியத் தூதரகம் என்று இப்படி பல முக்கியமான துறையைச் சேர்ந்த 'நடிகர்கள்' இலங்கைப் பிரச்சினையில் தலையிட்டார்கள்.**

அவர்கள் எதிர்பார்த்த மாதிரி இந்தியப் படை நடக்கவும் இல்லை. தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறறுத் தரவும் இல்லை. அதற்கிடையிலேயே துரதிர்ஷ்டவசமாக இந்தியப் படைக்கும் புலிகளுக்கும் மோதல் ஏற்பட்டது.

ஆக, இந்தியப்படை வந்தபொழுது நாங்கள் எதிர்பார்த்தோம்: இந்தியப்படையை இலங்கை அரசுக்கு எதிராகப் பயன்படுத்தி உரிமைகளைப் பெற வேண்டும் என்று. இலங்கை அரசு நினைத்தது: இந்தியப் படையைப் பயன்படுத்தி விடுதலை இயக்கங்களை முற்றாக அழித்துவிட வேண்டும் என்று. இதில் எது நடந்தது என்பது உங்களுக்கே தெரியும்.

இயக்கங்களைப் பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள்?

மக்களின் அபிப்பிராயம், கருத்து என்பது உறைந்து போனதொரு நிலையில் உள்ளது. அவர்கள் என்னதான் நினைக்கிறார்கள் என்பது யாருக்குமே தெரியாது. உண்மையில், யாருமே அவர்களுடன் நின்று வாழ்ந்து அவர்களது உணர்வுகளைப் புரிந்து கொள்ளவில்லை. இதுதான் உண்மை. நாங்கள் உட்பட அனைத்துக் குழுக்களையுமே மக்கள் தண்டிக்கப் போகிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்களது துயர அனுபவங்கள், எங்களுடையவற்றைக் காட்டிலும், வேறு எந்தக் குழுவைக் காட்டிலும் அதிகமானவை. சாமானிய மனிதர்களைக் காட்டிலும் அரசியல் அமைப்புக்களில் உள்ள எங்களைப் போன்றவர்கள் அதிக பாதுகாப்புடன் இருக்கிறோம் என்பதுதான் உண்மை.

முதலில் இலங்கை இராணுவத்தின் தாக்குதலை எதிர்கொண்டபோது குழுக்கள் அங்கே இருந்தன. எங்களில் பெரும்பாலோர் இங்கே இருந்தோம். அப்புறம் எங்களிடையே மோதல்கள்... அப்போதும் மக்கள் தான் துன்பங்களை அனுபவித்தனர் அப்புறம் இந்திய இராணுவத்தின் நுழைவு அது ஒரு விவரிக்க முடியாத கொடுமை. பத்து வருடங்களாக இலங்கை இராணுவம் முயன்று செய்ய முடியாததை இந்திய இராணுவம் இரண்டே வருடங்களில் செய்துவிட்டது. எங்கள் மக்களின் துயரங்கள் இப்போது ஸர்ரியலிசத் தன்மை கொண்டதாகி விட்டன. இன்னும் நிறையப் பேர், நடந்ததெல்லாம் ஒரு கனவு என்றே நினைக்கிறார்கள்.

அவர்கள் ஆதரவை யார் கேட்டாலும் கொடுப்பார்கள். ஏனெனில் ஆதரவு கேட்பவர் கையில் ஆயுதங்கள் இருக்கின்றன. ஆனால் அவர்கள் மனத்தில் இருப்பது என்ன என்று யாராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. உளவியல் ரீதியாகப் பார்த்தால் கடுமையான கொடுங்கோன்மைக்கு அவர்கள் உள்ளாக்கப் பட்டிருப்பது புரியும்.

இந்தச் சந்தர்ப்பத்தில பிரேமதாசாவின் அணுகுமுறை எப்படி இருக்கிறது?

பிரேமதாசாவின் அணுகுமுறை ஒரு வித்தியாசமாகவும் அலாதியாகவும் இருக்கிறது. பதவிககு வந்த காலந்தொட்டே தமிழ்ப் பேசும் மக்களுடைய இயக்கங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க விரும்புவதாக செய்திகளை அனுப்பினார். எங்களைப் பொறுத்தவரையில் — சனாதிபதி என்ற முறையில் பிரேமதாச இந்தியப் படை மோதல் ஏற்பட்ட காலங்களில் எங்களுக்குச் சட்ட ரீதியான சில உதவிகளைச் செய்ததை நாங்கள் மறுக்கவில்லை. அதாவது நாங்கள் பாராளுமன்றத்துக்குச் சென்ற பொழுதும் பாதுகாப்புப் பிரச்சினைகள் வந்தபோதும் அவர்கள்

## மக்கள் விரும்பிய அமைதி கிடைக்கவில்லை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**நாங்கள் இந்திய அரசுக்குச் சொல்லி இருக்கின்றோம்; உளவுத்துறைக்குச் சொல்லியிருக்கிறோம். இனிமேலாவது இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக எல்லோரும் ஒரே அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டும். இதிலே பதவிப் போட்டி, பெருமைக்கு இடமளித்து எம் மக்களைப் பகடைக்காயாக்க வேண்டாமென்று கேட்டுக் கொண்டிருக்கின்றோம். உண்மையில் இந்த அடிப்படையில் பிரதமர் வி.பி. சிங் அப்புடிச் சொல்லியிருப்பாரேயானால் அதை நாங்கள் வரவேற்கத் தயாராயிருக்கிறோம்.**

உதவி இருக்கிறார்கள். ஒருவேளை சிங்கள மக்கள்பார்க்கலாம்...இந்தியப் படையோடு போராடுகிற அல்லது அதற்கு எதிராகச் செயல்படுகிற இயக்கங்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டிய கடமை தமக்கு இருக்கிறது என்று நினைக்கலாம். கடமை என்பது தமிழ்ப் பேசும் மக்களின் மீதான இறுக்கம் என்று நாங்கள் பார்க்கவில்லை. தமிழ்ப் பேசும் மக்களின் பிரதிநிதிகளுக்கு இட்ட பிச்சையாகவும் நாங்கள் பார்க்கவில்லை. இது அவர்களின் தேவையின் காரணமாக செய்கிறார்கள். ஆனால் இதை நம்பி நாங்கள் ஏமாந்து போகவோ அல்லது நெருக்கமான மனமாற்றமாகவோ நம்பிக் கொள்ள நாங்கள் தயாராக இல்லை. ஆனால் பிரேமதாச அரசு படுபிற்போக்குத் தனமானது. மோசமான அடக்குமுறைகளை அப்பாவி சிங்கள மக்கள் மீதே ஏவிவிட்டிருக்கிறது. அதன் பொருளாதாரக் கொள்கை மிக மோசமானது. ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் அரசியல் கட்சித் தலைவர் என்ற பார்வையில் பார்க்காமல் இலங்கை நாட்டினுடைய அரசியல் நிர்வாகத் தலைவர் என்ற முறையிலேயே அதுவும் பாராளுமன்ற எம். பி. க்களுக்கும் அரசுத் தலைவருக்குமான உறவு என்றே பார்க்கிறோம். இது எந்த நேரத்திலும் முறியக்கூடியது; குறுகிய காலமே ஆயுள் கொண்டது.

> ராஜீவ் அரசாங்கம் முழுக்க முழுக்க அதிகாரிகளையும் உளவு நிறுவனங்களையும் நம்பியே இலங்கை பிரச்சினையை அணுகியது. ஆனால் புதிய பிரதமர் வி. பி. சிங் இலங்கைப் பிரச்சினையில் 'ரா' தலையீடு கூடாது என்று கூறியிருக்கிறாரே!

இதில் ஒரு முக்கியமான குறிப்பு என்னவென்றால், ஆரம்பத்தில் நாங்கள் இந்தியாவுக்கு வந்தபொழுது இந்தியாவில் எத்தனை உளவுத் துறைகள் இருக்கிறது என்பது போன்ற விபரங்கள் எமக்குத் தெரியாது. இந்தியாவின் நிர்வாக அமைப்பும் எங்களுக்குத் தெளிவாகத் தெரியாது. ஆனால் காலப் போக்கில் நாங்கள் இவற்றை அவதானித்தபோது பல உளவு ஸ்தாபனங்கள், இந்திய வெளியுறவுத் துறை, இந்தியப் பாதுகாப்புத் துறை, இலங்கை-இந்தியத் தூதரகம் என்று இப்படி பல முக்கியமான துறையைச் சேர்ந்த 'நடிகர்கள்' இலங்கைப் பிரச்சினையில் தலையிட்டார்கள். இவர்களில் ஒவ்வொருவருக்கும் ஸ்தாபன ரீதியான சுய நலமும் அதே சமயத்தில் பெருமையைத் தட்டிக் கொள்ள வேண்டுமென்ற எண்ணமும் ஆரம்பத்திலேயே இருந்திருக்கிறது. இப்படியான இந்தப் போட்டி மனப்பான்மை ஆரம்பத்தில் எங்களுக்குத் தெரியாது. இப்படி பல்வேறு சக்திகள் இந்தப் பிரச்சினையை பல்வேறு முகமாகக் கையாண்டு பல்வேறு முடிவுகளைக் கொடுத்து பல தவறான ஆலோசனைகளையும் அப்போதைய பிரதமருக்கு வழங்கி மிகுந்த குழப்பத்தில் இன்றைக்கு ஆழ்த்தி விட்டார்கள்.

எனவே, நாங்கள் இந்திய அரசுக்குச் சொல்லி இருக்கின்றோம்; உளவுத் துறைக்குச் சொல்லியிருக்கிறோம். இனிமேலாவது இலங்கைத் தமிழர் பிரச்சுனை தொடர்பாக எல்லோரும் ஒரே அணுகுமுறையைக் கடைபிடிக்க வேண்டும். இதிலே பதவிப் போட்டி பெருமைக்கு இடமளித்து எம் மக்களைப் பகடைக்காயாக்க வேண்டாமென்று கேட்டுக் கொண்டிருக்கின்றோம். உண்மையில் இந்த அடிப்படையில் பிரதமர் வி. பி. சிங் அப்படிச் சொல்லி இருப்பாரேயானால் அதை நாங்கள் வரவேற்கத் தயாராக இருக்கின்றோம்.

> ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் தலையிட வேண்டாம் என்று ஒரு ஆண்டுக்கு முன் வரதராசப் பெருமாள் அறிக்கை விட்டார். ஆனால் இன்று அவர் எந்த அடிப்படையில் தமிழ்நாட்டு முதல்வரையும் ஏனையோரையும் சந்திக்க வந்தார்?

நான் முன்னமே சொன்னது போல மாகாண சபை விட்ட தவறுகளில் இதுவும் ஒரு தவறு. குறுகிய கால சில வசதிகளையும் வாய்ப்புக்களையும் நிரந்தரமானவை என

**பத்து வருடங்களாக செய்ய முடியாததை இரண்டு வருடத்தில் இந்தியா செய்தது**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**எங்கள் உறவுமுறை என்பது ஒரு தனிப்பட்ட நிலைப்பாட்டில் பிறந்தது அல்ல. ஈழப் போராட்டத்தில் பிற இயக்கங்கள் கைக்கொள்ளுகின்ற முறையைப் பொறுத்துத்தான் நாங்கள் உறவுமுறையைத் தீர்மானிக்கிறோம். அந்த வகையில் 84ஆம் ஆண்டிற்குப் பின்னால் தேசிய விடுதலைப் போராட்டம் என்ற முரண்பாடு கூர்மை அடைந்தபொழுது எங்கள் கொள்கை நிலைப் பாட்டில் கொஞ்சம் மாற்றம் கொண்டு வந்து, முடிந்தவரை தேசிய விடுதலைக்குப் போராடும் இயக்கங்களோடு நல்லிணக்க முறையில் செயல்படுகிறோம் என்பது உங்களுக்கே தெரியும்.**

நினைத்துக் கொண்டு அவர்கள் விட்ட தவறில் இதுவும் ஒன்றாகத் தான் நாங்கள் நினைக்கின்றோம். எங்களைப் பொருத்தவரையில் நாங்கள் இன்றைக்கும் அன்றைக்கும் சொல்லுகிறோம்... அரசியல் கட்சிகளையோ அரசியல் வாதிகளையோ நம்பி தமிழ் நாட்டில் ஈழப் பிரச்சினையை முன் வைக்க வில்லை. நாங்கள் அவர்களின் ஊடாகச் சில காரியங்களைச் செய்தாலும்கூட பொதுநிலைப்பட்டு மக்களை அணுகுவது என்பதுதான் எங்களுடைய நிலைப்பாடு. ஆனால் வரதராசப் பெருமாள் காலத்தின் கட்டாயம் கருதி வெளியிட்ட அந்த அறிக்கை தவறு என்று அவரே ஒத்துக் கொண்டார், என்றுதான் நாங்கள் நினைக்கிறோம். அவர் நிச்சயமாக தமிழ்நாட்டுக்கு வந்தபோது தான் சொன்ன கருத்து தவறானது என்பதை உணர்ந்துதான் வந்திருக்க வேண்டும்.

ஈரோசுக்கும் புலிகளுக்குமான உறவு நிலை எப்படியிருக்கிறது?

எங்கள் உறவுமுறை என்பது ஒரு தனிப்பட்ட நிலைப்பாட்டில் பிறந்தது அல்ல. ஈழப் போராட்டத்தில் பிற இயக்கங்கள் கைக்கொள்ளுகின்ற முறையைப் பொறுத்துத்தான் நாங்கள் உறவுமுறையைத் தீர்மானிக்கிறோம். அந்த வகையில் 84ஆம் ஆண்டிற்குப் பின்னால் தேசிய விடுதலைப் போராட்டம் என்ற முரண்பாடு கூர்மை அடைந்தபொழுது எங்கள் கொள்கை நிலைப்பாட்டில் கொஞ்சம் மாற்றம் கொண்டு வந்து, முடிந்தவரை தேசிய விடுதலைக்குப் போராடும் இயக்கங்களோடு நல்லிணக்க முறையில் செயல்படுகிறோம் என்பது உங்களுக்கே தெரியும். ஈழ தேசிய விடுதலை முன்னணி என்ற ஒன்று அமைக்கப்பட்டு அதில் நாங்கள் பங்கு பற்றி நீண்டகாலமாக அந்த உறவை வளர்த்து வந்ததோடு இன்றைக்கும் எங்களுடைய உறவு எல்லா இயக்கங்களோடும் ஒரே மாதிரியாகத் தான் இருக்கிறது. விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் 1987க்குப் பின்னால் ஓரளவுக்கு தேசிய வாதத் தன்மையினுடைய பிரதிபலிப்பாக எதிர்ப்புச் சக்தியை வெளிக்காட்டிய போது நாங்கள் எங்களின் முழுமையான ஆதரவை அவர்களுக்கு வழங்கி இருக்கின்றோம்.

ஆனால் காலக்கிரமத்தில் எங்களுடைய அரசியல் நிலைப்பாட்டுக்கும் அவர்களுடைய சில அரசியல் நிலைப்பாட்டுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்ட பொழுது அதை நாங்கள் ஏற்றுக் கொண்டு அந்த வேறுபாடுகளைப் போக்கிக் கொள்வதற்கு அவர்களுக்கும் நாங்கள் இடம் கொடுத்துச் செயல்பட்டு வருகின்றோம். ஆனாலும் அவர்கள் எங்களை காரசாரமாக விமர்ச்சிக்கிறார்கள். அதற்காக எங்களுடைய உறவு சீரழிந்துவிட்டது என்று நான் சொல்ல முடியாது. காரணம் சகல இயக்கங்களினுடைய செயல்பாடும் எல்லா விடயங்களிலும் ஒரே மாதிரியாக இருக்க முடியாது. கருத்துவேறுபாடு இருக்கத்தான் செய்யும். அதனால் நாங்கள் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ள வில்லை. எங்களைப் பொறுத்தவரை மோதல் வரை இட்டுச் சொல்லாமல் ஆரோக்கியமான விமர்சனங்கள் மூலம் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கப் பார்க்கிறோம். வேறு இயக்கங்கள் எங்களைக் கொலை செய்து அட்டூழியங்கள் செய்த போதுங்கூட நாங்கள் தவிர்க்க முடியாமல் தடுப்பு நடவடிக்கைகளில் மட்டுமே ஈடுபட்டோமே அல்லாமல் எந்த வகையிலும் மோதலில் ஈடுபட்டது கிடையாது.

ஒரு பழைய கேள்வி. கொஞ்சம் புதிதாய் கேட்கிறோம். இந்தியப் படையோடு புலிகள் மோதல் தவிர்க்கப்பட்டிருந்தால் நிலைமை எப்படி இருந்திருக்கும்?

சில வரலாற்றுச் சம்பவங்களை யாரும் தடுக்க முடியாது. ஆனால் இந்தியத் தரப்பு விரும்பியிருந்தால் மோதலைத் தடுத்திருக்க முடியும். இது எங்களுடைய கருத்து. அவ்வாறு அந்த மோதல் தடுக்கப்பட்டிருந்தால் ஒரு வேளை இடைக்காலத் தீர்வை அடைந்திருக்கலாம். ஆனால் அந்த மோதல் ஒப்பந்தத்தையும் கேள்விக்குறியாக்கிவிட்டது. இடைக் காலத் தீர்வையும் நெருங்கமுடியாமல் செய்து விட்டது.

(பேட்டி : ஆசிரியர் குழு மற்றும் ஏ. எஸ். பன்னீர்செல்வன்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**கசாப்புக் கடைக்காரனுக்கு ஓர் அழகிய மகள். அவள் ஒரு கனவு காண்கிறாள். அக்கனவில் தனது தந்தை அழைத்து வந்த 'பசுப்பையன்' சாதாரணமானதல்ல; நாகலோகத்திலிருந்து வந்துள்ள புனித ஆத்மா என்று அவளுக்குத் தெரியவருகிறது. உடனே அவள் தனது தந்தையிடம் 'பசுவை கசாப்பு செய்யவேண்டாம். யாருக்காவது தானமாக அளித்து விடலாம்' என்று கூறுகிறாள்...**

# சமயச் சார்பற்ற நாடகங்கள் என்றால் என்ன?

□

**சப்தர் ஹாஷ்மி**

மேவாரி மொழியில் தழுவப்பட்டு பானு பாரதியின் இயக்கத்தில் உருவான கே. எம். பணிக்கரின் மலையாள நாடகம் 'பாஷு காயத்ரி' பரவலான பாராட்டுக்களைப் பெற்றது. பனாஜியில் (கோவா) நடைபெற்ற சங்கீத நாடக அகாடமியின் மேற்கு மண்டல நாடக விழாவில் அரங்கேற்றப்பட்ட இந் நாடகம் பிறகு டெல்லியில் நடந்த தேசிய நாடக விழாவிலும் நிகழ்த்தப்பட்டது. ராஜஸ்தான் மாநிலத்தின் மேவார் பகுதியிலுள்ள பழங்குடி மக்களிடையே பெருமளவு நிகழ்த்தப்பட்ட இந் நாடகம் கடந்த வாரம் டெல்லியில் வர்த்தகப் பொருட்காட்சித் துறைக்கு சொந்தமான மன்ஜார் நாடக அரங்கில் வழக்கமாக நிகழும் வாராந்தர நிகழ்ச்சியில் இடம் பெற்றது.

உதயப்பூரை சுற்றியுள்ள 'ஆரவல்லி' மலைப்பகுதிகளில் வசிக்கிற 'பிலு' இனத்தவரோடு சேர்ந்து 'திஷா நாட்ய சன்ஸ்தா' எனும் அமைப்பின் கீழ் இந்நாடகம் உருவாக்கப் பட்டது. பிலு இனமக்களின் பாரம்பர்யக் கலையான 'கௌரி' யின் வடிவத்தை இந் நாடகம் சுவீகரித்துக் கொண்டிருந்தது.

'கௌரி' — அறுவடைக்கு முன்பு நிகழ்த் தப்படுகிற விரிவான ஒருவகைச்சடங்கு! 'ராக்கி' தினத்திற்கு முதல் நாள் இச்சடங்கு துவங்கும். நாற்பது நாட்கள் நடைபெறும் இச்சடங்கு 'கௌரி' (பார்வதி) தெய்வ வழிபாட்டுடன் துவங்கும். தொடர்ந்து போர், போரில்தோல்வி, மரணம், மீண்டும் உயிர்த்தெழுவது இவற்றை உணர்த்தும் நாடகப் பாங்கிலமைந்த சடங்குகள் நாற்பது நாட்களுக்கும் நடைபெறும். இந் நிகழ்ச்சிகளனைத்துமே விவரித்து விஸ்தாரமாகச் சொல்லும் பாணியில்லாமல் கருத்தாலுணர்த்தும் பாணியிலேயே அமைந்திருக்கும்.

இதனடிப்படையில் உருவான 'பாஷு காயத்ரி' நாடகம் குறித்து அதன் இயக்குநர் பானுபாரதி இவ்வாறு குறிப்பிட்டார்: ''பிலு இனமக்கள் தாங்கள் பங்கேற்கும் நாற்பது நாள் சடங்கை தவிர்த்து வேறு எதிலுமே தங்களது நடிப்புத்திறமையை காட்டியதில்லை; நாடகமாடியதில்லை. 'பாஷு காயத்ரி' நாடகம் தான் முதன்முதலாக பிலு இன மக்களை, 'சடங்கின்' வளையத்திற்கு அப்பால் அழைத்து வந்து அவர்களை நாடகமாடச் செய்தது. பிலு இன மக்கள் தங்களது பாரம்பர்யக் கலையை மரபார்ந்த சடங்கு வகைக்கு வெளியே அழைந்து வந்தது அவர்களது வரலாற்றிலேயே இதுதான் முதல் முறையாக இருக்கும்.''

மற்றொன்று, 'கௌரி' சடங்கு பானு பாரதியை ஏற்கனவே ஈர்த்திருந்தது. அச் சடங்கு வடிவத்தில் நாடகத்திற்கான பல சாத்தியக்கூறுகள் இருப்பதை அவர் கண்டிருந்தார். குறிப்பாக அச்சடங்கு வடிவத்தில் இசை வகிக்கும் பங்கு அவரை வெகுவாக ஈர்த்தது. எத்தகைய நவீனமான கருத்துக்களாயினும் அவற்றை இந்த நாடக வடிவத்திற்குள் கொண்டுவந்து அவற்றை வீர்யத்தோடு வெளிப் படுத்த முடியும் என்று அவர் உறுதியாக நம்பினார்.

ஆனால் இதற்காக மட்டும் இத்தகைய 'சோதனை' முயற்சியை பானுபாரதி மேற்கொள்ளவில்லை.

அழுத்தமான மத நம்பிக்கை சார்ந்த சடங்காசாரக் கூறுகளின் எல்லைகளைத் தாண்டி அதன் சமயச் சார்பற்ற கலைத் தன்மையை வெளிக்கொணர வேண்டும் என்று அவர் விரும்பினார்; அதன் அடிப்படையில் இம்முயற்சியில் ஈடுபட்டார்.

அந்நாடகத்தின் கதை இதுதான்:

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாக தேவதைகளால் காவல் காக்கப்படும் ஒரு பெரும் 'பொக்கிஷத்தினை' அடைய ஜந்திரி எனும் மாந்திரீகன் ஆசைப்படுகிறான். 'உனக்கு இந்த பொக்கிஷம் வேண்டுமெனில் உன்மகனை எனக்கு பலி தந்துவிட்டு எடுத்துச் செல்' என்று நாகராஜன் கூறுகிறான். உடனே ஜந்திரி தனது மந்திரத்தால் மகனை ஒரு பசுவாக மாற்றி நாகராஜனுக்கு பலி தர முற்படுகிறான். அப்போது ஜமாதியா எனும் பணக்கார நாடோடி தனது செல்வங்கள் அனைத்தையும் ஈடாக கொடுத்துவிட்டு ஜந்திரி யிடமிருந்து பசுவை ஓட்டிச்சென்று விடுகிறான்.

அப்போது ஒரு ஏமாற்றுக்காரன் ஜமாதி யாவிற்கு ஆசை காட்டுகிறான். குறிசொல்லும் பசுவாக இதனைப் பயன்படுத்தி நிறையப்பணம் சம்பாதிக்கலாம் என்று ஆலோசனை கூறு கிறான். ஜமாதியாவிற்கு அதில் உடன் பாடில்லை. அவனது யோசனைக்கு சம்மதிக் காமல் பசுவை அழைத்துவந்து விடுகிறான்.

பிறகு 'பசுவை' பையனாக மாற்ற பல முறை முயன்று தோல்வியுற்று கடைசியில் விரக்தியடைந்து 'பசுவை' ஒரு கசாப்புக் காரனிடம் கசாப்பு செய்யக் கொடுத்து விடுகிறான்.

கசாப்புக் கடைக்காரனுக்கு ஓர் அழகிய மகள். அவள் ஒரு கனவு காண்கிறாள். அக் கனவில் தனது தந்தை அழைத்து வந்த 'பசுப் பையன்' சாதாரணமானதல்ல; நாகலோகத்தி லிருந்து வந்துள்ள புனித ஆத்மா என்று அவளுக்கு தெரியவருகிறது. உடனே அவள், தனது தந்தையிடம் 'பசுவை கசாப்பு செய்ய வேண்டாம். யாருக்காவது தானமாக அளித்து விடலாம்' என்று கூறுகிறாள். அதன் படியே தந்தையும் பசுவை தானம் செய்து விடுகிறார். தானம் பெற்றவர்கள் பசுவை ஓட்டிச்செல்லும் போது அவள் அந்தப் பையனின் 'சுயரூபத்தை' காண்கிறாள். அவள் மனது கிடந்து அடித்துக் கொள்கிறது. பிறகு அந்தப் பையன் மீது காதல் மேலிட அவனை தேடிச் செல்கிறாள். அப்போது ஜந்திரியும் ஜமாதியாவும் பைய னைத் தேடி வருகின்றனர். மூவரும் நேராக நாகலோகம் போகிறார்கள். சுற்றிலும் நாகங் கள் உச்சகதியில் நடனமாடிக் கொண்டிருக்க, நடுவில் அமர்ந்திருக்கிறான் நாகராஜன். மூவரும் நாகராஜனிடம் பையனை திருப்பித் தருமாறு முறையிடுகிறார்கள். தன்னைச்சுற்றி ஆடிக்கொண்டிருக்கும் நாகங்களைச் சுட்டிக் காட்டிய நாகராஜன், இந்த நாகங்களுக் குள்ளே நீங்கள் தேடிவந்தவன் இருக்கிறான். அவனை அடையாளம் கண்டு அழைத்துச் செல்லுங்கள் என்று கூறுகிறான். நடனமாடிக் கொண்டிருக்கும் நாகங்களுக்கிடையே அந்தப் பையன் இருப்பதை அவர்களால் உணர முடி கிறது. ஆனால் அந்தப் பையனை தனித்து அடையாளம் காண அந்த மூவராலும் முடிய வில்லை; குழம்புகிறார்கள்.

உச்சகதியில் இசை ஒலிக்கிறது...கோரஸ் ஸாக ஒரு பாடல் ஒலிக்கத் துவங்குகிறது. 'ஒன்றில் எல்லாம், எல்லாம் ஒன்றில்' ('one in all and all in one') எனும் பொருள் தொனிக் கும் பாடல் அது.

பாடல் தொடர்கிறது. இசையின் வேகம் அதிகரிக்கிறது. ஜந்திரி, ஜமாதியா, அந்த இளம் பெண் மூவருமே இசையில் ஈர்க்கப்பட்டு நாகங்களோடு சேர்ந்து ஆடத் துவங்குகிறார் கள்.

இப்படி முடிகிறது நாடகம்.

இந்த நாடகத்தில் என்னைத் தொட்ட ஒரு அம்சம், அசாதாரணமான முறையில் பயன்படுத்தப் பட்டிருந்த அதன் இசைதான். அந்நாடகத்தின் உயிரோட்டமாக அதன் அடி நாதமாக அது விளங்கியது. அந்நாடகம் முழு வதுமே ஒரு குறிப்பிடும் விதத்தில் இசையால் தீர்மானிக்கப்பட்டு கட்டுப் படுத்தப்பட்டு, வழி நடத்திச் செல்லப்பட்டது. பார்வையாளனை ஈர்க்கவும், நாடகக் கதைப்போக்கை வெளிப் படுத்தவும் இசை முக்கிய பங்கு வகித்தது. பலகாட்சிகளை இணைப்பதற்காக மட்டும் அல்ல; குறிப்பிட்ட சூழலை உருவாக்கவும் குறிப்பிட்ட உணர்வை மேலெழச் செய்யவும் சிறப்பான முறையில் இசை பயன்படுத்தப் பட்டிருந்தது. பயன்படுத்தப்பட்டவை அனைத் துமே மிகவும் எளிமையான ராகங்கள்.

சிக்கலில்லாத கிராமப்புற பாணியில் நாட கம் முழுதும் அமையப் பெற்ற போதிலும் அதில் இடம் பெற்ற 'கனவுக்காட்சி' மிகவும் நுட்ப மான உத்திகளைக் கொண்ட நாடகமாக இதனை மாற்றிவிட்டது.

கற்பனைத் திறனோடு இசையை பயன் படுத்தியது காட்சியமைப்பில் உள்ள லயம், அனைவரையும் ஈர்க்கக்கூடிய தன்மை. இது போன்ற பல அம்சங்கள் இருந்த போதிலும் ''பாஷ்காயத்ரி''யால் ஒரு நாடகமாக உயர்வு பெற முடியவில்லை. வெறும் சடங்காகவே இருந்தது.

உண்மையில் பாஷ்காயத்ரியின் கதை நாடகத் தலைமை வாய்ந்ததுதான். அதோடு அதில் நடித்த நடிகர்கள், ஜந்திரியாக நடித்த கேமாராம், ஜமாதியாலாக நடித்த ரோடாராம் கசாப்புக் கடைக்காரனாக நடித்த கமானியா அனைவருமே நாடகத்தைப் பற்றிய உயரிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வளர்ச்சியுற்ற உணர்வு மட்டம் கொண்டவர்கள். இருந்தபோதிலும் 'பாஷ-காயத்ரி' ஒரு சடங்காகத்தான் நிகழ்ந்து முடிந்தது. அது மட்டுமல்ல அந்நாடகத்தின் தனிப்பட்ட கதாபாத்திரங்களுக்கிடையே உருவாகும் மோதல்களும் சிக்கல்களும் மண்ணுக்குப் பொருந்தாத குணாம்சங்களைக் கொண்டிருந்தன.

பொதுவாக அனைத்து விதமான சடங்குகளிலும் நாடகத்தின் கூறுகள் இருப்பதைக் காணலாம். குறிப்பாகப் பழங்குடி மக்களின் சடங்காசாரங்களில் இது பளிச்சென வெளிப்படுவதைப் பார்க்கமுடியும்.

பார்க்கிற எது ஒன்றையுமே உள் வாங்கிக் கொண்டு அதாகவே பாவிக்கிறதன்மை பழங்குடி மக்களிடத்தில் உண்டு. இனம் புரியாத அதிசயங்களையெல்லாம் புரிந்து கொள்ள அதுவே சரியான வழி என்று அவர்கள் கருதினர்.

சடங்கிலுள்ள இத்தகைய நாடகக்கூறுகளையும் நாடகத்தையும் ஒன்றாகக் கருதி விடுகிற தவறுகள் நமக்கு அடிக்கடி ஏற்படுவதுண்டு. இது ஒரு விபரீதமான புரிதல்.

நாடகம் எப்போது உருவெடுக்கிறது? புராதனமான சடங்குகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்கிற போதுதான் அது நாடகமாக உருவெடுக்கிறது.

இது எப்போது நிகழ்கிறது? வாழ்வினது பிரச்னைகளுக்கு சடங்குகள் மூலமாக மட்டும் தீர்வு காண முடியாது என்பதை உணர்கிற போதுதான் நிகழ்கிறது. வேறு விதமாகச் சொல்ல வேண்டுமானால் சமூக வளர்ச்சியானது சடங்குகளை அதீதமான தேவையற்ற ஒன்றாக மாற்றி விடுகிற போது நிகழ்கிறது.

வரலாற்றினடிப்படையில் பார்க்கப் போனால் சமயச் சார்பற்ற, சமயக் கூறுகளற்ற நாடகங்களின் தொடக்கம் இதுதான்.

நாடகமானது சடங்குகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்ட போதிலும், மதச் செல்வாக்கின் எல்லைகளைத் தாண்டி வருவதற்கு அது பெரிதும் போராட வேண்டியிருந்தது.

இந்தப் போராட்டம், சமூகத்திலுள்ள மதத்திற்கு அப்பாற்பட்ட மக்கள் பகுதியினர் வலுப்பெற்று எழுவதன் மூலம் ஊக்குவிக்கப்பட்டது.

இன்று இந்தியாவில் நாம் சில விசித்திரமான சூழல்களை சந்தித்துக் கொண்டுள்ளோம். நகர்ப்புறத்தின் பிரக்ஞையுள்ள 'அரசியல் நாடக' வகைகளைத் தவிர சமயக் கூறுகளற்ற பாரம்பர்யமான நாடக வகைகள் பலவும் கிராமப்புறங்களில் இருந்து வருகின்றன. காஷ்மீரிலுள்ள 'பாந்த்-பத்தர்', பஞ்சாபிலுள்ள 'நாஃகால்', ஹரியானாவின் 'ஸ்வாங்', உ. பி. யின் 'நாடங்கி', வங்கத்தின் 'ஜாத்ரா' போன்றவை இத்தகையதே!

அதே நேரத்தில் மதத்தின் சாயம் தோய்ந்த சடங்காசாரக்கூறுகளை உள்ளடக்கிய ராம்லீலா, கிருஷ்ணலீலா, யக்ஷகானா, கதகளி போன்ற நாடக வகைகள் ஒருபுறத்திலும், பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில், நாடகத்தின் கூறுகள் அமையப் பெற்ற முழுமையான சடங்கு வடிவங்கள் மறுபுறத்திலும் இருந்து வருகின்றன.

நமது மரபார்ந்த நாடக வடிவங்களின் சமயச் சார்பைக் களைய ஓர் பிரக்ஞையுள்ள நாடக ஊழியன் இறங்குவானெனில், அது அவ்வளவு எளிதானதல்ல. மிகவும் சிரமமான பணியாகும். பழமையான மதக் கண்ணோட்டத்திலிருந்தும் சடங்காசாரக் கண்ணோட்டத்திலிருந்தும் மக்களை விடுவிக்க வேண்டும் என்று கருதுகிற, அந்த குறிப்பிட்ட மதத்திற்குள்ளேயிருக்கிற மக்கள் பகுதியினரோடு கைகோர்த்துக்கொண்டு செயல்படும் போது தான, ஏதோ ஒரு சிலவற்றையாவது சாதிக்க முடியும்.

மக்களின் புராதனமான காட்டுமிராண்டித்தனமான நம்பிக்கைகள், கவைக்குதவாத சம்பிரதாயங்கள் இவை மட்டுமே இச்செயல்களுக்கு தடையாக இருக்கும் என்று கருதி விட வேண்டாம்.

மக்களை மதத்தின், சடங்குகளின் பிடிகளுக்குள்ளே வைத்திருந்து அதன் மூலம் பலன் அனுபவித்துக் கொண்டிருப்பவர்களும், மக்கள் விழிப்புணர்வு பெறக்கூடாது என்று கருதுபவர்களும் இத்தகைய செயல்பாடுகளுக்கு தடையாக வரக்கூடும். நாம் இதையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

எவ்வாறாயினும் ஒன்றுமட்டும் தெளிவு. தனியொருவனாக ஒருவன் இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவானேயெனில் மதக்கண்ணோட்டத்திலும் சடங்காசாரக் கண்ணோட்டத்திலும் சிக்கிக்கொள்ளாமல் அவனால் மீண்டு வரமுடியாது. இது மிகவும் சிரமம். ஒரு வேளை இவற்றை தவிர்க்க முடியாமல் கூட போகலாம். ஆனால் அதற்காக இதுதான் சரியென்று அவன் தன்னை சமரசம் செய்து கொள்வானேயாயின் நிச்சயமாக அவனால் சமயச சார்பற்ற கலையினை வென்றெடுக்க முடியாது.

துரதிருஷ்டவசமாக பானுபாரதியின் 'பாஷ-காயத்ரி, மதச் சடங்குகளின் கருத்தோட்டத்தோடு சமரசம் செய்து கொண்டு விடுகிறது. எடுத்துக் கொண்ட நாடகத்தின் கதைக் கருவும் அக்கதையின் அணுகுமுறைகளும் தவிர்க்க முடியாமல் இத்தகைய நிலையை உருவாக்கியிருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரை எனது மதிப்பீடு இதுதான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இது தவிர மற்றொரு விஷயத்தையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். உண்மையில் பானு பாரதி இந்நாடகத்தின் மூலம் வேறு பல விஷயங்களைச் சாதித்துள்ளார்.

பிலு இனமக்கள் பல நூற்றாண்டுகளாய் நிகழ்த்திவரும் சடங்கு வடிவம் 'கௌரி'. வேறு ஒரு கதையைச் சொல்ல, கருத்தை வெளிப்படுத்த 'கௌரி' சடங்கின் பாடல், நடனம், நடிப்பு முறைகளைப் பயன்படுத்துவதை மிகப் பெரிய சாதனை என்று சொல்லிவிட முடியாது.

ஆனால் அந்த 'பிலு' இன மக்களை சடங்கு அல்லாத ஒன்றில் அந்தப் பாடல்களை பாடி, நடனங்களை ஆடி நாடகமாடச் செய்தது—அதாவது 'நாடகத்தில்' நடிக்கவைத்தது உண்மையிலேயே ஒரு குறிப்பிடத் தகுந்த சாதனைதான்.

குறிப்பிட்ட பருவ காலத்தில், குறிப்பிட்ட தெய்வ வழிபாட்டின் போது நிகழ்த்தப்படும் சடங்கு நாடகத்தை வேறு ஒரு பருவகாலத்தில் வழிபாடு அல்லாத நிகழ்ச்சியில் நிகழ்த்தியது ஒரு மிகப் பெரிய சாதனை.

அதாவது 'சடங்கு நாடகத்திற்கு' குறிப்பிட்ட பருவ காலத்திற்கும், வழிபாட்டு விழாவிற்கும் உள்ள அறுக்க முடியாத 'புனிதமான இணைப்பை' துண்டித்து சடங்கிலிருந்து நாடகத்தை மீட்க முற்பட்டது இதுவரை யாரும் செய்யாத ஒன்று.

எனினும் சமயச் சார்பற்ற கலையை வென்றெடுக்காமல் இச் சாதனைகளை நிலை பெறச் செய்யமுடியாது.

சடங்கு நாடகங்களில் ஏற்கனவே உள்ள 'புராதன நம்பிக்கைகளை' அகற்றிவிட்டு வேறொரு 'புராதன நம்பிக்கையை' இட்டு நிரப்புவதன் மூலம் மதக் கண்ணோட்டத்தின் எல்லையைத் தாண்டி 'சடங்கு நாடகத்தின்' சமயச் சார்பற்ற கதைத்தன்மையை நிச்சயம் வெளிக்கொணர்ந்து விட முடியாது.

காவலம் நாராயண பணிக்கரின் 'பாஷா காயத்ரி' பொருணமை சாராத உளம் சார்ந்த ஆன்மீகக் கண்ணோட்டம் உடைய நாடகம். ஆன்மா என்பது தனித்து நிலை பெற்றிருப்பது என்றும் தெய்வாம்சமுள்ள ஓர் சக்தி அனைத்தையும் ஆட்கொள்கிறது என்றும் அந்நாடகம் நம்பிக்கை தெரிவிக்கிறது.

அதோடு மட்டுமல்ல; மனிதனையும் சமூகத்தையும் முன்னேடுத்துச் செல்லும் அடிப்படையான முரண்பாடுகளின் மோதல்களை அது முற்றிலுமாக மறுதலிக்கிறது.

இத்தகைய கண்ணோட்டத்தைக் கொண்டுள்ள ஒரு நாடகத்தின் மூலம், ஒரு சமூகத்தின் சிந்தனையோட்டத்தில் சமயச் சார்பற்ற மனோபாவத்தை தூண்டிவிட முடியுமா? உருவாக்கிவிட முடியுமா! நிச்சயம் முடியாது.

அச்சமூகத்து மக்கள் மத்தியிலே பொதிந்துள்ள 'அனைத்துக்கும் மேலான' தெய்வீக சக்தியின் மீதான நம்பிக்கையை மேலும் அதிகரிக்கத்தான் செய்யும். வேறெதற்கும் உதவாது.

பிலு இன மக்களின் மதச் சார்பான சடங்காசார உலகக் கண்ணோட்டத்தோடு காவலம் நாராயண பணிக்கரின் நாடகம் மோதவும் இல்லை. அதனை சவாலுக்கு அழைக்கவும் இல்லை. மாறாக அந்த மதக் கண்ணோட்டத்திற்கு 'தத்துவ அடிப்படையை' வழங்குகிறது.

பாரம்பர்ய நாடகக் கலையை பாதுகாக்கிற வளர்த்தெடுக்கிற பணியை 'மீட்பு வாதிகளின்' கையில் விட்டு விடக்கூடாது என்று பானுபாரதி கூறுகிறார். ஆனால் பானு பாரதி 'பாஷா காயத்ரி' நாடகம் மூலம் செய்தது என்ன?

உலகில்உள்ள அனைத்து விஷயங்களையும் நம்பிக்கைகளையும் 'அத்வைத சித்தாந்தத்திற்குள்' அடைப்பது போலவே பிலு இன மக்களின் புராண நம்பிக்கைகளையும் 'அத்வைதகுப்பிக்குள் அடைக்க முயல்கிறார்.

இது மீட்பு வாதிகள் செய்கிற காரியம் தானே? இதில் பானு பாரதி மீட்பு வாதிகளிடமிருந்து எவ்விதத்தில் வேறுபடுகிறார்.

மற்றொன்று 'கௌரி சடங்கிற்குள்' எந்த நவீனமான கருத்தையும் வெளிப்படுத்த முடியும் என்றார் பானுபாரதி... நமக்கு சில கேள்விகள் எழுதுகிறது? பானுபாரதியின் அகராதியில் 'நவீனம்' என்றால் என்ன? சரி... 'நவீனம்' என்று எதை நாம் குறிப்பிடுகிறோம்?

மத்திய காலத்தின் புராதனக் கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கிற ஒரு நாடகம்... 1981ம் ஆண்டில் எழுதப்பட்டது என்பதாலே நவீன நாடகமாக ஆகிவிடமுடியுமா? நிச்சயம் முடியாது!

பாரம்பர்யக் கலை வடிவத்திற்குள் நாம் நவீனமான உள்ளடக்கத்தை கொண்டு போக வேண்டுமென்று விரும்பினால் முதலில் அந்தக் கலை வடிவத்தின் மதக் கண்ணோட்டத்தை, சடங்குத்தன்மையை வழித் தெறிந்து விட வேண்டும். அப்போதுதான் அது நவீனமாக முடியும்.

'பாஷா காயத்ரி' போன்ற நாடகங்கள் பழங்குடி மக்களிடம் சமயச் சார்பற்ற கலையை வளர்ப்பதற்கு பதிலாக அவர்களது சடங்குகளை நியாயப்படுத்தி நிலை பெறச் செய்துள்ளது. வேறொன்றுமில்லை. □

(சப்தர் ஹாஷ்மி : நாடகக் கலை பற்றிய கட்டுரைகளின் தொகுப்பு, முதல் பாகம்; வெளியீடு: சென்னை புக்ஸ், சென்னை-2).

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பேசிப்
# பேசிப்பேசி
# பேசிப்பேசி
# பேசிப்பேசி...

பேசு.

பேசிக்கொண்டே இரு.
மூளைக்கின்பம் பேச்சு.

மூளையைக் கழட்டித்
தொங்கவிடு பேசும்போது.

நாக்குக் குழறும்வரை
ஓயும் வரை பேசு.

எதிராளி முகத்தில்
எச்சில் தெறிக்கும்,
விடாதே.

பேசிக்கொண்டே
சண்டை போடலாம்.
பேச்சாலேயே
சண்டை போடலாம்.
பேசியதாலே
தலையை வெட்டலாம்.
காதைக் கடித்து
மென்று துப்பலாம்.

நாள்முழுக்கப் பேசி
மீண்டும் உன்
இடத்தில் நில்லு.

பேசிப் பேசி
உன்னை
என்னை
அவனைக் கெடுக்கலாம்.
அவளையும் கெடுக்கலாம்.

தாய்போற் பேசினால்
நத்திப் பிழைக்கலாம்.

விளையாட்டுக்குப் பேசு.
உன் உதடுகள்
உதைக்கும் வார்த்தைகள்

அடுத்தவன் உதைப்பில்
திருப்பவும் உன்னிடம்.

ஆளாளுக்குதைப்பதே
அருமையான விளையாட்டு...

தவளைக்குரலில்
அடுக்கு வார்த்தையில்
பேசத் தெரிந்தால்
அறிஞன் நீ தான்.

வார்த்தைகளைச்
சாக்கடைக்குள்
போட்டுழப்பு.
உழப்பி உழப்பி
வெளியே வீசு.
வந்து விழுவது
எதுவானால் என்ன?

பேச்சால்
இதயங்களைப் பிள.
உருக்கு.
இதயங்களைப் புரட்டிவிடு
தெருவில்.

ஒரு போதும்,
தேவனை அழைத்து மட்டும்
ஊமைகளைப்
பேச வைக்காதே.

ஊமைகள் பாக்யவான்கள்
செவிடெனிலோ
இன்னும் நன்று.

உருப்படியாய் யாரேனும்
ஒரு வார்த்தை பேசவந்தால்
அடித்து விரட்டு அவரை
அறுவையென்று.

— புதியஜீவா

www.tamilarangam.net

நூல் விமர்சனம்

தொ. பரமசிவன்

# சிறுகதை நவீன மனிதனின் குரலாகக் கேட்கிறது

[''தமிழில் சிறுகதை—வரலாறும் வளர்ச்சியும்'' என்ற பெயரில் சிட்டியும், சிவபாத சுந்தரமும் ஒரு நூல் எழுதியிருக்கின்றனர். 368 பக்கங்களில் 75 ரூபாய் விலையில் 'க்ரியா' இந் நூலை ஆகஸ்ட் 1989இல் வெளியிட்டுள்ளது.]

சோ. சிவபாதசுந்தரம், 'கௌதம புத்தர் அடிச்சுவட்டில்' என்ற தன்னுடைய பயணநூல் வாயிலாகத் தமிழ் வாசகர்களால் அறியப்பட்டவர். அவ்வப்போது தமிழ் இதழ்களில் கட்டுரைகள் எழுதிவந்த சிட்டி (பெ.கோ. சுந்தரராஜன்) தி. ஜானகிராமனுடன் இணைந்து 'நடந்தாய் வாழி காவேரி' என்ற பயணநூலை எழுதியவரும் ஆவார். சிட்டியும் சிவபாதசுந்தரமும் இணைந்து 1977இல் ''தமிழ் நாவல்: நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும்'' என்றொரு நூலை எழுதி வெளியிட்டவர்கள். இப்போது தமிழ்ச் சிறுகதைகளையும் 'அளந்து' அறிந்து எழுதியுள்ளனர்.

தமிழ்ப் படைப்பிலக்கியத் துறைக்கும் தமிழ்க்கல்வித் துறைக்கும் ஆன இடைவெளி தமிழ்நாட்டில் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் பெரிதாகிக்கொண்டே வந்தது. (பாரதி கூட தமிழாசிரியர் வேலையை மூன்று மாத காலத்தில் உதறி எறிந்துவிட்டு வெளியிலே வந்தபின் 'அன்மொழித் தொகை சோறு போடாது; நெல்லுத்தான் சோறு போடும்' என்று தமிழாசிரியர்களுக்கு வழிகாட்ட முயன்றான்) இந்த இடைவெளியை இட்டு நிரப்பப் பேராசிரியர்கள் சிலர் முயன்றனர். மதுரைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த முத்துச் சண்முகம் பிள்ளை இந்த இருவரையும் அழைத்து 1976இல் தமிழ் நாவல் குறித்தும் 1978இல் தமிழ்ச் சிறுகதை குறித்தும் பல்கலைக் கழகத்தில் உரையாற்ற வைத்துள்ளார். எனவே இந்த நூலில் நூலாசிரியர் இருவரும் 'பல்கலைக் கழக அங்கீகார முத்திரையை' அழுத்தமாகவே பதித்துள்ளனர்.

தமிழ்ச் சிறுகதையின் வரலாற்றை, 1850 தொடங்கி வ.வே.சு. ஐயர் வரை, அடுத்து 1945 (புதுமைப்பித்தன்) வரை, 1960 வரை, அதன் பின்னர் என்று நான்கு காலகட்டமாக இவர்கள் பகுத்திருக்கின்றனர். 1989இல் வெளியிடப்பட்ட நூலில் 1978 வரை மட்டுமே வெளிவந்த சிறுகதைகளைப் பற்றிப் பேசுவது, பின்வந்தவற்றைப் பேச மறுக்கும் 'பெரிய மனுஷத்தனமாக' இருக்கலாம்; விமர்சனம் ஆகாது. நூலாசிரியர்களின் பின்னிரண்டு காலப் பகுப்புகளும் நாட்டு விடுதலைக்குப் பின் எழுந்த புதிய சூழ்நிலைகளில் பிறந்தவை, இந்தப் பகுப்பு முறைகளுக்கான நியாயங்கள் நூலாசிரியர்களால் சரிவரக் காட்டப்படவில்லை.

சிறுகதை என்பது புதிய தொழில் வளர்ச்சி காரணமாக விளைந்த சூழ்நிலைகளில் பிறந்த இலக்கிய வடிவமாகும். இந்தச் சூழ்நிலையில் சமூகத்தில் எழும் புதிய அலைகளினால் புரட்டி எடுக்கப்படும் மனிதன், தான் இழந்ததையும் பெற்றதையும் சிந்திக்கிறான். பழைய சங்கிலிகள் இற்றுப் போக புதிய தளைகள் அவன் கால்களைச் சுற்றுகின்றன. எனவே சிறுகதை என்பது நவீன மனிதனின் குரலாகக் கேட்கிறது. எனவே இந்த வடிவத்தில் சலனம், அதிர்ச்சி, ஏமாற்றம், நம்பிக்கை, எதிர்ப்புணர்வு என எல்லாம் கலந்து நிற்கின்றன. எந்த நிலையிலும் அவன் உலக வாழ்க்கையை மறுதலிக்க முடியாதவனே. மண்ணுலக வாழ்க்கையிலிருந்து அவனால் பிரிந்து நிற்க இயலாது. எனவே தான் ''வாழ்க்கையின் குறுக்குவெட்டுத் தோற்றம் ஒன்றைக் கலைநயமும் சொல் அழகும் கொண்டதாகச் சித்தரித்தால் அதுவே சிறந்த சிறுகதையாகிறது'' என்கிறார் ராஜம் கிருஷ்ணன்.

ஆயினும் இந்த நூலாசிரியர்களின் இலக்கியக் கொள்கை வித்தியாசமானது; அதிலே அவர்கள் 'மிகச் சரியாகவே' நின்றிருக்கிறார்கள். எனவே நூலில் திரும்பத் திரும்பப் பேசப்படுவதெல்லாம் சிறுகதையின் வடிவம்தான். 'வடிவ அமைப்புள்ள' 'வடிவ உணர்வுடன்' 'சிறப்பான வடிவத்தில்' ஆகிய சொற்றொடர்கள் இந்த நூல் முழுதும் விரவிக் கிடக்கின்றன. ஒரு படைப்பின் வடிவம் என்பது அதன் உள்ளார்ந்த தன்மையில் கால் கொண்டிருக்கிறது. உள்ளடக்கத்தின் செம்மை வடிவத்தில் விளங்கி நிற்கிறது. ராஜம் கிருஷ்ணனின் கருத்திலே வெளிப்படுவதுபோல ஒரு மரத்தின் குறுக்குவெட்டுத் தோற்றம், அதன் உள்ளார்ந்த தன்மையானது வேதியியல் உயிரியல் மாற்றங்களை உள்வாங்கிக் கொண்ட முறையினை வெளிப்படுத்துகிறது. அந்த அனுபவமும் புறச் சூழ்நிலைகளும் கூடிவினைப்பட்டு அது ஒரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வடிவத்தினைப் பெறுகிறது. நிச்சயமாக அந்த வடிவம் மூளியாக நிற்பதில்லை. சதுரமாகவோ செவ்வகமாகவோ வக்கிரப்படுவதும் இல்லை. உள்ளடக்கத்தின் தன்மை சார்ந்தே ஒரு வடிவம் பரிணமிக்கிறது. உள்ளடக்கத்திற்கும் வடிவத்திற்குமான இந்த உறவை நூலாசிரியர்கள் மிகச் 'சௌகரியமான முறையில்' மறந்துபோய் விட்டார்கள். எனவே நூல் முழுவதும் 'வடிவழகிய' புராணமாகத் தோற்றமளிப்பது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. "சிறுகதையின் இலக்கியத்தரம் வடிவ முழுமையைச் சார்ந்திருப்பதால், அண்ணாதுரையின் படைப்புக்கள் ஆழ்ந்த மதிப்பீட்டுக்குத் தகுதியானவை" என்று முத்தாய்ப்பு வைக்கும் இடத்தில் நூலாசிரியர்களின் இலக்கியக் கோட்பாடு வாசகர்களுக்குத் தெளிவாகி விடுகிறது. இந்த வகையான கோட்பாடு காரணமாகவே இவ் வரலாற்று விமர்சன நூல் பல 'விபத்துக்களைச்' சந்தித்து ஒரு தகவல் களஞ்சியமாக மாறியிருக்கிறது.

நூலாசிரியர்களின் 'முதிர்ச்சி' காரணமாக இந்தத் தகவல் களஞ்சியமும் முழுமையடையவில்லை. 368 பக்கத்திலமைந்த இந்த நூலில் 'தூரன்' என்ற பெயர் எப்படி விடுபட்டுப் போக முடியும்? மாலன், பாலகுமாரன், பிரபஞ்சன், சுப்பிரமணிய ராஜு ஆகியோர்களின் பெயர்கள் குறிப்பிடப்படும் பொழுது இந்தப் பட்டியலில் 'பூமணி'யின் பெயர் இல்லாமல் போனது எப்படி? இத்தனைக்கும் எழுபதுகளில் மாலன், செயப்பிரகாசம், சுப்பிரமணிய ராஜு ஆகியோரின் கதைகள் வெளிவந்த அதே கண்ணதாசன் இதழ்களில் பூமணியின் சிறுகதைகளும் வெளிவந்தனவே. வேலையில்லாத இளைஞர்களின் மனநிலையைச் சித்தரிக்கும் கதைகளை எழுதியதாக 'வண்ணநிலவன், பிரபஞ்சன், வீர. வேலுசாமி மூவரும்' என்று குறிப்பிட்டுவிட்டு இவர்களைவிடச் சிறப்பாகச் சித்தரிக்கும் பூமணியின் பெயர் விடுபட்டுப் போகிறது. வேலையில்லாத இளைஞனின் சிந்தனைப்போக்கை விளக்கும் 'கிழிசல்' கதை மாணவர்களின் பாடப்புத்தகத்தில் இடம் பெற்ற பிறகும்கூட, இந்த வரலாற்றுப் புத்தகத்தில் இடம்பெறாமற் போனது, இந்த நூலின் வரலாற்றுத் தன்மையைக் கேள்விக் குறியாக்குகிறது.

மற்றுமொரு செய்தி, தனிநபர்களின் பெயர்கள் விடுபட்டுப் போனதற்கான சமாதானம் செல்லுபடியாகாத மற்றுமொரு இடமும் இந்த நூலில் உண்டு. தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் 'மணிக்கொடி'யை விட அழுத்தமாக நினைக்கப்பட வேண்டிய மற்றுமொரு பத்திரிகை 'தாமரை'யாகும். நூலாசிரியர்களின் அங்காந்த பார்வைக்குரிய பெருமையான 'பல்கலைக்கழக ஆய்வுப் பெருமையும்' தாமரை இதழுக்கு நிறையவே உண்டு. எழுபதுகளில் கவனத்தைக் கவர்ந்த இளம் எழுத்தாளர்கள் பலருக்குப் பயிற்சிக்களமாகத் தாமரை அமைந்தது என்பது தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் மறைக்க முடியாத உண்மையாகும். கால் நூற்றாண்டுக் காலமாகத் தமிழ்ச் சிறுகதைக்குப் பணியாற்றிய தாமரையைப் பற்றி ஒருசொல்கூட இந்த நூலில் இல்லை என்பது வியப்புக்குரிய செய்தியில்லை! ஏனென்றால் தாமரைக்குப் 'புருஷ பார்வை' தான் உண்டே தவிர 'அரசபார்வை' கிடையாது.

தமிழ்ச் சிறுகதையின் வரலாற்றைப் பற்றி அவ்வப்போது எழுத வந்த எல்லோர்க்கும் 'மணிக்கொடி' பற்றிய ஒரு மயக்கமே உண்டு. "மணிக்கொடியின் பல்வேறு கட்டங்களில் எழுதியவர்கள் யாவரையும் ஒன்றுசேர வைத்துப் பார்த்தல்கூடாது. மணிக்கொடிக் காலத்தில் எழுத ஆரம்பித்து, அதற்கு வெகுகாலத்திற்குப் பின்னரே சிறுகதையின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் எழுதும் முதிர்ச்சி பெற்றோர் பலர் இருக்கின்றனர்" என்று கூறுவார் சிவத்தம்பி. நூலாசிரியர்கள் இருவருக்கும் பிற்காலத்திய மணிக்கொடியோடு சிறிது தொடர்பு இருந்திருக்கிறது. அந்தத் தொடர்பு தந்த மயக்கம் இந்த நூலுக்குள்ளும் மணிக்கொடி புராணத்தை அரங்கேற்றியிருக்கிறது.

தனித்தனியாகச் சிறுகதை எழுத்தாளர்களின் படைப்பாற்றல் குறித்து, இந்த நூலாசிரியர்களின் கருத்தைத் தொகுத்துப் பார்ப்பது, நூலாசிரியர்களின் முகங்களை விளங்கிக் கொள்ள நமக்குதவும். ப. செயப்பிரகாசத்தின் காடு, கிராமத்து ராத்திரிகள், இரவுகள் உடையும் ஆகிய சிறுகதைத் தொகுதிகள் நூலாசிரியர்களின் பார்வை பெறும் புண்ணியத்தோடு பிறக்கவில்லை. "ஒரு ஜெருசலேம்" தொகுதியிலுள்ள 'அம்பலக்காரர் வீடு' என்ற கதையை மட்டும் எடுத்துக்காட்டிவிட்டு நூலாசிரியர்கள் எழுதுகின்றனர்.

> "இந்தக் கதையின் அமைப்பு நல்ல வடிவ உணர்வுடன் காணப்படுகிறது. செயப்பிரகாசத்தின் பல கதைகள் 'ஒரு ஜெருசலேம்' என்ற தொகுதியில் காணப்படுகின்றன."

இப்படி ஒரு வரலாற்று விமரிசனநூலைப் பெறுவதற்குத் தமிழிலக்கிய உலகம் தவம் செய்திருக்க வேண்டும்.

சுந்தர ராமசாமியின் தொடக்க காலச் சிறுகதைகள் பற்றி நூலாசிரியர்களின் மதிப்பீடு இது :

**"முற்போக்கு அணியில் கண்ட சமுதாய நோக்கில் இரண்டொரு கதைகளை எழுதியபின்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கோலம்

ஐந்து புள்ளியை அழித்து
ஏழு புள்ளி
ஏழு புள்ளியை அகலித்து
ஒன்பது புள்ளி
ஒன்பது புள்ளியை அழித்து
பதினொரு புள்ளி
பதினொரு புள்ளியை அகலித்து
பதின்மூன்று புள்ளி
வாசலடைத்து வீசிவிளங்கி
தேர் மான் மயில் யானை
எல்லாம் ஒரு காலம்
எல்லாம் ஒரு வேகம்.

— விக்ரமாதித்யன்

புன்னகையில்
அரும்பிய காதல்!
விகாரமாய் சிரிக்கும் சந்தி.

□

எது கொடுமை?
சிலுவையில் ஏசுநாதர்
வரதட்சணையில் சகோதரி.

□

இலைகள் உதிர்கின்றன
கூட்டிலிருந்து எட்டிப்பார்க்கும் பறவை
தனிமையின் வெறுமை

□

நாளை இதுதானோ
கம்ப்யூட்டர் ரோபோட்
மியூசியத்தில் மனிதன்.

ந. சுந்தரராசன்.

கவிதைகளும் சில கட்டுரைகளும் தான் அப்போது அவருக்குப் பழக்கமான இதழ்களில் எழுதி வந்தார்."

மேற்குறித்த வரிகளிலே தெறிக்கிற அலட்சிய மனோபாவம், சராசரித் தமிழ் வாசகனின் மீதுள்ள நூலாசிரியர்களின் அபிப்ராயம் ஆகும்.

புதுமைப்பித்தனின் சிறுகதை மேதைமையை இவர்கள் தவிர்க்க முடியாமல் ஒத்துக்கொண்டாலும் (ப. 121) "புதுமைப்பித்தன் சிருஷ்டிகளில் வடிவ வகைகள், உத்தி வேறுபாடு, தத்துவச் செறிவு, உணர்ச்சிச் சாயல்கள், பொருட் செழுமை, சிந்தனைப் போக்கு, சொல்லாட்சி, கலை நோக்கு, பற்றின்மை முதலிய அம்சங்கள் தற்காலத் தமிழிலக்கியத்தில் வேறெவரும் துணிந்து கையாளாத வகையில் விரவிக் கிடப்பதைக் காணலாம் (ப. 120)" என்பதுதான் இவர்களுடைய ஒட்டுமொத்த மதிப்பீடாகும்.

'சாப விமோசனம்' கதையில் எல்லோரையும் போல அகலிகையின் கற்பை விவாதப் பொருளாக்காமல், இராமனின் சாப விமோசனம் கொடுக்கும் தகுதியையே கேள்விக் குறியாக்கியிருக்கிறார், புதுமைப்பித்தன். இந்தக் கதையைப் படித்துவிட்டு புராணக் கதைகளைத் தம் விருப்பப்படி மாற்றக் கூடாது என்ற 'நீதி'யை வலியுறுத்தக் கலைமகளில் 'அகலிகை கதை' என்ற சிறுகதையை இராஜாஜி எழுதினார் என்பது நூலாசிரியர் தரும் புதிய செய்தியாகும். டெல்லிப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் ஒருவர் துணையோடு புதுமைப்பித்தன் 'இலக்கியத் திருட்டு' (Plagiarism) நடத்தினார் என்பதையும் நூலாசிரியர்கள் தெளிவாக நிறுவியிருக்கிறார்கள். தொ. மு. சி. இரகுநாதன் எழுதிய 'புதுமைப்பித்தன் வரலாற்'றில் இலக்கியத் திருட்டுப் பற்றித் தமிழர்களுக்குப் புதுமைப்பித்தனே முதலில் எடுத்துக் கூறினார்-என்ற செய்திக்கு இவர்கள் மறைமுகமாக மறுப்புரையை வழங்குகிறார்கள் என்பதும் எதையோ செரிக்கஇயலாமல் திணறும் இவர்களின் முகமும் நுணுகிப் படிப்பவர்க்குப் புரியும்

கடைசியாக இராஜாஜியின் சிறுகதைகள் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றிய தலைசிறந்த திறனாய்வாளரான கைலாசபதி 'கலையழகு குன்றியவை' என்று குறிப்பிட்டதை எடுத்துக்காட்டி—"படைப்பிலக்கியத்தில் கலையம்சம் முக்கியமானதென்பதைக் கால்கதியில் முற்போக்குவாதிகள் ஒப்புக்கொள்ள வேண்டி வந்தது" என்பது மேற்கண்ட கூற்றிலிருந்து நிரூபிக்கப்படுகிறது—என்ற இந்நூலின் நோக்கத்தைக் கம்பீரமாகச் சுட்டிக் காட்டி முடித்திருக்கிறார்கள்.

இந்நூல், இலக்கணச் சுத்தமாக மேல்தட்டு மனோபாவத்துடன் நமக்குத் தரப்பட்டுள்ள தகவல் களஞ்சியம். □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிரியன் எழுத்தாளர் பேராசிரியர் ஓம்ரான் டாலிப்

# அரசியல் குளறுபடிகளிலிருந்து மனிதாபிமானத்தை காப்பதே பெரிய கேள்விதான்

[பேராசிரியர் ஓம்ரான் டாலிப் அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகத்தில் கணிதத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர். தற்பொழுது டமாஸ்கஸ் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி வருகிறார். இந்தியாவின் அரசியல் மற்றும் சமூக வாழ்க்கையை விரிவாக ஆய்வுசெய்துள்ளார். இந்தியாவில் 5 வருடம் தங்கி பரவலாக சுற்றுப்பயணம் செய்த பிறகு 'சோர்வான—வினாடிகளுக்கிடையேயான பயணம்' (Journey Through Tired moments) என்ற நூலை எழுதியுள்ளார். பிரென்ச், ருஷியன், ஆங்கிலம், அரபி, துருக்கி மற்றும் ஹிந்துஸ்தானியும், தேவநாகரியில் எழுதவும் தெரிந்த இவரை இந்தியாவின் அறிவுஜீவிகள், டாக்டர்கள், எழுத்தாளர்கள் பேட்டி கண்டுள்ளனர். பேராசிரியராகவும், எழுத்தாளராகவும், பத்திரிக்கையாளராகவும் இருக்கும் இவர் விஞ்ஞான புனை கதைகளையும் எழுதிவருகிறார். ஆசியாவை நேசிக்கும் இவர் மார்க்சியத்தின் மீது நம்பிக்கை உடையவர்.]

? 1948 சுதந்திரத்திற்குப் பின் சிரியாவின் இலக்கியம் பற்றி கூறமுடியுமா.

! அரபு இலக்கியத்திலிருந்து சிரிய இலக்கியத்தை வேறுபடுத்திப் பார்க்க முடியாது. அது மிகவும் சிரமமானது. சிரிய இலக்கியமென்று நாங்கள் ஏதும் தனிச்சிறப்பாக பெற்றிருக்கவில்லை. எங்களது நாவல்கள் மற்றும் பிற இலக்கிய வடிவங்கள் எல்லாம் அரபு இலக்கியத்திலிருந்தே உருவானது. நாங்கள் வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்தாலும் ஒரே தேசத்தை சேர்ந்தவர்கள். அரபு நாடுகள் 22 ஆகப் பிரிந்திருந்தாலும் மொழி, கலாச்சாரம், வரலாறு மற்றும் பழக்க வழக்கங்களில் நாங்கள் ஒரே இனமாக வாழ்கிறோம். குறிப்பாக 1946க்குப் பிறகு எழுத்தாளர்களின் சுதந்திரத்தில் வளர்ச்சி ஏற்பட்டதனால் 1950-ல் முதன்முதலாக நாங்கள் 'சிரியன் எழுத்தாளர் சங்கம்' ஒன்றை ஏற்படுத்தினோம். ஒரு சில எழுத்தாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் அவர்களாலேயே நிர்வகிக்கப்பட்டு வந்தது.

? தற்பொழுது சிரியாவில் எத்தனை எழுத்தாளர் சங்கங்கள் உள்ளன.

! ஒரே ஒரு சங்கம்தான் உள்ளது. அதற்கு 'அரபு எழுத்தாளர் பொதுச்சங்கம்' என்று பெயர். அரபு நாடுகளான மொராக்கோ, எகிப்து, டுனிஸ்ஸியா, லெபனான் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் அங்கம் வகித்தாலும் அதிக அளவில் சிரிய எழுத்தாளர்களே உள்ளனர். மற்ற நாடுகளில் 'எழுத்தாளர்கள் பொதுச்சங்கங்கள்' இருந்தாலும் சிரியா, வடக்கு ஏமன், பாலஸ்தீனம் போன்ற நாடுகளில் உள்ள எழுத்தாளர் சங்கங்களின் ஒன்றியமாக 'அரபு எழுத்தாளர் சங்கம்' உள்ளது. 1950-க்குப் பிறகு 'சிரியா எழுத்தாளர் சங்கம்' அரசாங்கத்தின் ஒரு அங்கமாக மாறியது. அரசு கத்தின் ஒரு அங்கமாக மாறியது. அரசு எல்லாவித பொருளாதார உதவி செய்தாலும் அரசு தலையீடு அச்சங்கத்திற்கு கிடையாது.

? எல்லா அரபுநாடுகளும் கலாச்சார ரீதியாக ஒன்று என்று கூறினீர்கள், ஆனால் மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் ? கருத்தியல் ரீதியாகவும், இன்னும் பிறவற்றிலும் நிறைய வேறுபாடுகள் அவர்களிடம் உள்ளது. அவர்கள் மத்திய-கிழக்கு இலக்கியத்தாலும் பாதிக்கப் பட்டிருக்கலாமல்லவா.

! உண்மைதான். முன்பு அல்ஜிரியன், பாபிலோனியன் இன்னபிற பல்வேறு நாகங்களின் பாதிப்புகள் நடந்த இடம் என்று நீங்கள் சொல்வீர்கள். அதுபோல ரோமன் மற்றும் பெர்சியர்களிடமிருந்தும் சில பாதிப்புகள் வந்துள்ளது. அப்பொழுது பூகோள-அரசியல் (geo-politics) ரீதியாக பல சிக்கல்கள் ஏற்பட்டதினால் அப்பகுதி

தமிழாக்கம் : கான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நான்காகப் பிரிக்கப்பட்டு சிரியா, லெபனான், ஜோர்டான், பாலஸ்தீனம் என அழைக்கப்பட்டது. ஆனால் ஆரம்பத்தில் அப்பகுதி அஷாம் (Asham) என்றழைக்கப்பட்டது. 1920-க்கு முன்பு பிரெஞ்சுப் படைகளால் இப்பகுதி இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒன்று சிரியாவாகவும், மற்றொன்று லெபனானாகவும் மாறியது. இப்பகுதிகள் ஜோர்டான் நதியின் கிழக்கு மற்றும் மேற்குப்பகுதியில் அமைந்திருப்பதால் முறையே ஜோர்டானாகவும், பாலஸ்தீனமாகவும் மாறியது. இப்பிரதேச மாற்றம் நிகழ்ந்திருப்பினும் நாங்கள் ஒரே இனம் என்றே நம்புகிறோம். வேறு வேறு நாட்டில் நாங்கள் இருந்தாலும் நாங்கள் எல்லாம் ஒரே இனம், அது அரபு இனம் ஆகும்.

? உங்கள் நாடு பிரெஞ்ச் மற்றும் துருக்கியின் ஆதிக்கத்தில் இருந்தபோது அவற்றின் மொழி, சிந்தனை, இலக்கியம் போன்றவற்றின் பாதிப்புகள் உங்கள் நாட்டில் இருந்திருக்கும். அதை நீங்கள் எப்படி எதிர்கொண்டீர்கள்.

! துருக்கியின் பாதிப்புகள் என்று நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. காரணம் அவர்களுக்கென சொந்தமான நாகரிகம் எதுவும் இல்லை. 400 வருடமாக எங்கள் நாட்டை அனைத்துவகை எதேச்சதிகாரத்தின் மூலம் ஆண்டார்கள். அவ்வளவே. இக்குறிப்பிட்ட கட்டத்தை "இருண்ட காலங்கள்" (Dark Ages) என்று அரபுலகில் சொல்லப்படுகிறது. 400 வருடமாக கொடுங்கோன்மை செய்த அவர்கள் எங்களின் கலாச்சாரம் மற்றும் நாகரிக வளர்ச்சியை தடுத்துவிட்டார்கள். 19-ம் நூற்றாண்டின் இறுதியில் ஒட்டமான் (Ottaman Turks) டர்க்ஸீக்கு எதிராக பலவிதப் போராட்டங்கள் ஆரம்பமானதன் விளைவாக 1916-ல் துருக்கியர்களுக்கு எதிரான புரட்சி நடந்தது. இதனையே 'அரபுப் புரட்சி' (Arab Revolution) என்று சொல்கிறோம். புரட்சிக்கு தலைமை தாங்கிய ஷரிப் ஹுசைன் அரபு நாடுகளுக்கெல்லாம் தானே மன்னராக வேண்டும் என்ற தவறான எண்ணத்தால் பிரான்சு, துருக்கி, இங்கிலாந்து போன்ற நாடுகளின் உதவியைப் பெறுவதற்காக அந்நாடுகளுடன் சில ஒப்பந்தங்களை செய்து கொண்டார். அந்தச் சமயத்தில் பிரிட்டன் மற்றும் பிரான்சுக்கு எண்ணம் வேறாக இருந்தது. ஹுசைனுக்கு பாதுகாப்பு தருகிறோம் என்ற போர்வையில் அந்நாட்டு கச்சாப் பொருட்களை சுரண்டலாம் என்பதற்காக ஹுசைனுடன் சில அரசியல் தந்திர உத்திகளைச் செய்ய ஆரம்பித்தார்கள். அரேபியாவை விட்டு எப்பொழுது துருக்கியர்கள் வெளியேறினார்களோ உடனே பிரிட்டிசும், பிரான்சும் எல்லாவற்றையும் ஆக்கிரமித்துக் கொண்டன.

? அரபு நாடுகள் எல்லாம் ஒரே இனம் என்கிறீர்கள். ஆனால் வெளிநாட்டுத் தூண்டுதல்கள் ஏன் அதிக அளவில் அவர்கள் மீது இருக்கிறது? அரேபியர்கள் பொருளாதார வளர்ச்சி அடைந்துவிட்டார்கள். ஆனால் கல்வியில் வளர்ச்சி அடையவில்லை. எந்தப் பிரச்சினையாகட்டும் ஏன் பாலஸ்தீனம் அரேபியரின் பேரால் வருகின்றன? வெளிநாட்டுத் தூண்டுதல் பெருகிக் கொண்டிருக்கிறதா.

! 1920வரையிலும் யூதர்களின் ஆதிக்கத்தில் இருந்தோம். அந்தச் சமயத்தில் கல்வி, கலாச்சாரம் எதுவும் இல்லாமல் இருந்தது. ஏனென்றால், எங்களை அவர்களின் பூட்சுகளுக்கு கீழேயே வைத்திருக்க விரும்பினார்கள். இங்கு பெட்ரோல் கண்டுபிடித்த பிறகு உலகின் பல்வேறு ஆதிக்க சக்திகள் அரபு நாட்டுக்குள் ஊடுறுவ ஆரம்பித்தன. காரணம் அவர்களுக்கு பெட்ரோல் முக்கியமாகத் தேவைப்பட்டது. தொடர்ந்து தங்கள் செல்வாக்கை நேரடியாகவோ, மறைமுகமாகவோ பெருக்கிக்கொள்ள ஆரம்பித்தார்கள். அரபு நாடுகள் மேற்கத்திய நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது என்றாலும், அமெரிக்காவின் ஆதிக்கம் ஒன்றிரண்டு வருடம் கூட இல்லை. இந்த நிலை கடந்த சில வருடம்வரைகூட நீடித்தது. இப்பொழுது சண்டைகளும், பிரிவுகளும் அரேபியர்களுக்குள்காணப்படுகிறது. முன்பு நாங்கள் இதுபோல் பிரிந்து நின்றதில்லை. நாசர் (Nasser) காலத்தில் நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருக்க விரும்பினோம். ஆனால் இவர் காலத்தில் சில சதிகள் உருவாக்கப்பட்டு அரேபியர்களின் ஒற்றுமையைக் குலைக்க நினைத்தார்கள். காரணம், நாங்கள் ஒன்றாக இணைந்து எங்களின் சக்தியை அறிந்து கொண்டால் அவர்களின் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியாது. மேலும், அரேபியர்கள் தங்கள் எண்ணெய் வளத்தால் மிகப்பெரும் சக்தியாக மாறி உலக அரசியலில் முக்கிய இடம் பெற்றுவிட முடியும் என்று நினைத்தார்கள். அதிலிருந்தே அவர்கள் அரேபியர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களுக்குள் சண்டைகளையும், குழப்பங் களையும் உண்டாக்க ஆரம்பித்தார்கள்.

? அரபு நாடுகள் அதன் எண்ணெய் வளத் தாலும், இஸ்லாத்தின் மறுமலர்ச்சியாலும் உலகத்தில் மாபெரும் முக்கியத்துவம் பெறு வோம் என்று நினைத்தார்கள். உண்மை தான். சுமார் 1400 வருடங்களுக்கு முன்பு அந்த தீர்க்கதரிசி (Prophet) நபிகள் நாயகம் வந்தார். அவர் சிறந்த அறிவாளி யாகவும் அரசியல்வாதியாகவும் இருந்தார் என்றே நான் சொல்லவேண்டும். புதிய திசை வழியையும், பல உருவாக்கங்களை யும் உருவாக்கி இஸ்லாத்தை சௌதி அரேபியாவிலிருந்து ஸ்பெயினுக்குள் கொண்டு சென்றார்.

! குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். அதனை சௌதி அரேபியா என்று சொல்லமுடியாது. உண்மையில் அது அப்படி அழைக்கப்பட வில்லை. மன்னர் சௌத் (Saud) பெயரா லேயே அப்படி அழைக்கப்பட்டது.

? பிறகு எப்படி அழைக்கப்பட்டது.

! அந்தச் சமயத்தில் அது அல்-ஹிஜாஸ் (Al-Hijaz) என்றே அழைக்கப்பட்டது.

? அந்தத் தீர்க்கதரிசிக்கு இன்றும்கூட மரி யாதை தரப்படுகிறது. ஆனால் இஸ்லாத் தின் மக்கள் இப்பொழுதும்கூட ஏன் ஒன்று சேரவில்லை. கடாஃபீ, ஹுசேன் மற்றும் கோமேனி போன்றவர்கள் தங்கள் அரசியல் கருத்துக்களை இஸ்லாம் பெயரில் வெளி யிடுவது அரேபியர்களின் ஒற்றுமைக்கு ஆபத்து என்று நினைக்கவில்லையா.

! நீங்கள் சொல்வது சரியான விஷயம்தான். கடாஃபியாகட்டும், ஹுசைனாகட்டும் அல் லது சவுதி மன்னராகட்டும் எல்லோருமே இஸ்லாத்தின் பேரிலேயே பேசுகிறார்கள். தங்களின் எண்ணங்களை வெளியிடுகிறார் கள். இது பொதுவாக இஸ்லாத்திற்கு விரோதமானது. இதில், அவல நிலை என்னவென்றால், எல்லோருமே தங்கள் எண்ணங்களை வெளியிட இஸ்லாம் சிறந்த வழி என நினைக்கிறார்கள். எடுத் துக்காட்டுக்கு, கோமேனியை எடுத்துக் கொள்ளலாம். தற்பொழுது அவர் நாடு, அழிவுக்குப் போய்விட்டது. மதப்பற்று உள்ளவர்கள் தங்களின் சுயலாபத்திற்காக மட்டுமே இஸ்லாம் பற்றி பேசுகிறார்கள்.

? என்னுடைய பார்வையில் ஒவ்வொரு மத மும் அரசியல் பார்வையைக் கொண்டதே. சில நேரம் மதத்திலிருந்து ஆன்மீக நிறை வையும், மன விடுதலையையும் பெறு கிறோம். மதச்சட்டங்கள் ஆதரிக்கிற சில விஷயங்கள் நல்லவைகளாக இருக்கின் றன. எப்பொழுதும், ஒவ்வொரு புதுமதம் தோன்றுவதற்கும் அங்குள்ள அரசியல் முரண்பாடே பிரதானமாயிருக்கிறது. உதாரணமாக, இஸ்லாம் நடைமுறைக்கு வந்தபிறகு அதனை எதிர்த்து தோன்றிய புதுமதமான மகிசி (Mahisi) முக்கியமான ஒன்றாக அந்த நேரம் கருதப்பட்டது.

! கிறித்தவர்களுக்கும், யூதர்களுக்கும், மற்ற மதங்களுக்கும் கூட அதற்குரிய மரி யாதையை இஸ்லாம் தருகிறது. எதிரி களைக்கூட நேசிக்கும் நாம் மதவெறி யிலிருந்தும் விலகியே இருக்கிறோம். இஸ் லாமின் வரலாற்றை ஆராய முயன்றால் தீர்க்கதரிசியான நபிகள் நாயகம் ஒரு சிறந்த அரசியல்வாதி, சந்தேகமில்லை. அந்த நேரம் ஒரு சிறந்த தலைவராகவும் இருந்தார். பொதுமையை போதித்தார். அவருக்குப்பிறகு ஆரம்பித்த சண்டை மதச்சண்டையாக இல்லாவிட்டாலும் அரசி யல் சண்டையாக வளர்ந்து இஸ்லாத்தை பல பிரிவுகளாகப் பிரித்தது. இந்தப் பிரிவு களைக் கூர்ந்து பார்த்தீர்களேயானால், அவர்களின் மத நடவடிக்கைகள் வித்தியாச மாக இருந்தாலும் வரலாற்றின் மூலா தாரங்கள் ஒன்றுதான். அரசியல் ரீதியாக பிரிந்திருப்பதன் காரணமாக ஒருவரை ஒருவர் அழிக்கவே முயற்சிக்கின்றனர். சுன்னி-சியா (Sunny-Shia) இனத்தின ருக்குமிடையேயும், சிலசமயம் சியா இனத் திற்குள்ளேயும் சண்டை எழும். பல இனங் களாக பிரிந்திருந்தாலும் சில விஷயங் களில் இயற்கையாகவே முரண்பட்டிருக் கின்றனர். உதாரணமாக, சாஃபி (Chafi) இனத்தாருக்கு ஹும்பாலி (Humbali) இனத்தாரை பிடிக்காது. மீண்டும் அரசியல் பிரச்சினை என்னவென்றால் மதத்தை மனிதாபிமானத்திலிருந்து பிரிப்பதுதான்.

? இன்றைய அரசியலின் போக்கு, பரிமானங் கள் மற்றும் அதன் சிக்கல்கள் எல்லாம் நாம் அறிவோம். ஆனால் 2080 வருடங் களுக்கு முன்பு இதனைப்பற்றி சரியாக தெரியாது. சிரியாவில் நன்கு பிரபலமான இலக்கிய வாதியாகவும், ஒரு அறிவு ஜீவியாகவும் இருக்கிற தங்களிடம் அர சியலிலிருந்து மனிதாபிமனத்தை எவ்வாறு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாதுகாப்பது என்பதுபற்றி உங்கள் பார்வையை தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

! 2000 வருடங்களுக்கு முன்பே அரசியல் தோன்றியிருக்கலாம். பெரும் நாகரிகங்கள் தோன்றியதும் இந்தக் காலகட்டமே. ஆனால் அரசியல் குளறுபடியிலிருந்து மனிதாபிமானத்தை காப்பது என்பது பெரிய கேள்விதான். எனினும் நாம் விடை கண்டாகவே வேண்டும். கருத்தியல் ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் ஏற்படும் அனைத்து வகைப் பிரச்சினைகளுக்கும் காரணம் உலக ஆதிக்கச் சக்திகளே என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அமெரிக்காவிற்கும் மற்ற ஆதிக்கச் சக்திகளுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. உலகத்தையே அபகரித்துக் கொள்ள அமெரிக்கா நினைக்கிறது. அதனால் சில நாடுகளில் தன் மேலாதிக்கத்தை நிறுவியுள்ளது. எந்த ஒரு மூன்றாம் உலக நாடும் இந்த ஆதிக்கச் சக்தியின் பிடியிலிருந்து தப்பவில்லை. நடுநிலையாகவும், அனுமதி விரும்பும் நாடுகளான சுவிட்சர்லாந்து, நார்வே கூட இதன் ஆதிக்கத்திலிருந்து தப்பவில்லை ரஷியாகூட தன் கருத்தின் மூலம் சில ஏழை நாடுகளை தன் பிடியில் வைத்திருக்கிறது. இந்த நாடுகள் ரஷியாவின் அரசியலைப் பின்பற்றுகின்றன. காரணம், உற்ற நண்பனாகவும், தங்கள் நாடுகளின் நலன்களுக்காகவும் ரஷியா பாடுபடுகிறது என்றும் நினைக்கிறார்கள். மூன்றாம் உலக நாடுகள் எனப்படும் இவைகள், ரஷியாவைப் போன்று தானும் சோசலிச அமைப்பு மூலம் சமவளர்ச்சி அடைந்துவிடுவோம் என நினைக்கின்றன. ஆனால் அதேசமயம் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் ஆதிக்கத்தில் அடைபட்டுள்ளன.

? எந்த முறையில் பாதிப்புக்குள்ளாகின்றன.

! சமத்துவமின்மை, மனிதநேயம் எதுவுமே அங்கு இல்லை. மக்கள் தங்களின் குறைந்தபட்ச தேவைக்கே காலையிலிருந்து மாலைவரை உழைக்க வேண்டியுள்ளது. சாப்பிடுவதும் ஓடுவதுமாக வாழ்கின்றார்கள். உயிர்வாழ்வதற்காக அவர்கள் குறைந்தபட்சமாவது சம்பாதித்தாக வேண்டும். ஆனால் இந்த நிலையிலும் ஏகாதிபத்திய நாடுகளால் கடுமையாக சுரண்டப்படுகின்றனர். சுரண்டுவதை ஒரு வியாபாரமாகவே செய்கிறார்கள். என்னுடைய எண்ணம் என்னவென்றால் எந்த வியாபாரமும் சுத்தமானதல்ல. தங்களுடைய சொந்த லாபத்திற்காக சுரண்டும் இவர்கள் மிக மோசமானவர்களே. பிழைப்புக்காக வெளிநாடு செல்லும் ஏழைகளை அனுப்பும் நாடுகள் கூட சில வகையில் அமெரிக்காவின் ஆதிக்கத்தால் பாதிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டுக்கு உங்களின் பக்கத்து நாடான பாகிஸ்தான் கூட ராணுவத்தின் உதவி கொண்டு ஒரு சர்வாதிகாரியினால் ஆளப்படுகிறது. பாகிஸ்தான் அமெரிக்காவிற்கு அடகு வைப்பதன் மூலம் தன் நாட்டை அழித்துக் கொண்டிருக்கிறார். அங்குகூட ஒருவரும் நிம்மதியாக இல்லை. இதே நிலைதான் ஏறக்குறைய வளைகுடா நாடுகள், அரபு நாடுகள், இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலும். இந்நாடுகளில் மற்ற நாடுகளைவிட அமெரிக்காவின் ஆதிக்கம் நேரடியாக இருப்பதை நீங்கள் பார்க்கலாம்.

? ஆப்கானிஸ்தான் சூழ்நிலையை எப்படிப் பார்க்கிறீர்கள்.

! ஆப்கானிஸ்தானத்திற்குச் சென்று பார்க்கும் பொழுது அங்கு முஜாஹைதீன்கள் (Mujahaideens) என்று சொல்லிக் கொள்பவர்கள் பாகிஸ்தான் வழியாக அமெரிக்க உதவியை பெறுவதை நான் பார்க்க முடிந்தது. ஈரானில் இதே முஜாஹைதீன்கள் கோமேனியை ஒழித்துக்கட்ட விரும்புகிறார்கள். ஆப்கானிஸ்தானில் இவர்கள் ரஷியாவை ஒழிக்க விரும்புகிறார்கள். காரணம் அவர்களுக்கு அமெரிக்கா ஆயுத உதவி செய்கிறது. அவர்கள் செய்திருக்கும் சில ஒப்பந்தங்கள் கிளர்ச்சியை விரிவுபடுத்த விடாமல் தடுக்கிறது. இரண்டு வல்லரசுகளும் மோதிக் கொண்டால் பெரும் விபத்து நேரிடும் என்பதில் சந்தேகமில்லை. முஜாஹைதீன் கிளர்ச்சிக்காரர்கள் மூலம் ரஷியப்படையை எதிர்க்கிறது அமெரிக்கா. ஆனால் முஜாஹைதீன்கள் அப்பாவிகள். அமெரிக்கா இவர்களுக்கு நேரடியாக பயிற்சி அளிக்கிறது. தாங்கள் தங்கள் உரிமைக்காக உண்மையாக போராடுவது எப்படி என்பது தெரியவில்லை. நடந்து கொண்டிருக்கும் ஆப்கன் பிரச்சனைக்கு உடனடி தீர்வு இப்போது இல்லை,

(தொடரும்)

நன்றி : TWC

பேட்டி கண்டவர்: நஸிரா சர்மா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்